அந்தூரியம் பூக்கள் 178 ஐ ஐந்து பூக்கள் வீதம் உள்ள கூட்டங்களாகப் பிரித்தால், பிரிக்கப்படும் கூட்டங்களின் எண்ணிக்கை யாது? எத்தனை அந்தூரியம் பூக்கள் மீதியாக இருக்கும்?

```
     35
5 | 178
    15
     28
     25
      3
```

178 ÷ 5 = 35 மீதி 3


கூட்டங்களின் எண்ணிக்கை = 35

மீதியாக இருக்கும் அந்தூரியம் பூக்களின் எண்ணிக்கை = 3

(1) 640 யோகட் கோப்பைகளை 5 யோகட் கோப்பைகள் வீதம் எத்தனை பெட்டிகளில் அடைக்கலாம்?

(2) 729 பொத்தான்களை ஓர் ஆடைக்கு 5 வீதம் எத்தனை ஆடைகளிற்குப் பொருத்தலாம்? இவ்வாறான இன்னோர் ஆடைக்கு 5 பொத்தான்களைப் பொருத்துவதற்கு இன்னும் எத்தனை பொத்தான்கள் தேவை?

# 10 நீளமும் தூரமும் I




நீளத்தை அளப்பதற்குக் கிலோமீற்றரும் பயன்படுத்தப்படுகிறது.

**கிலோமீற்றருக்கான நியமக் குறியீடு km ஆகும்.**

**உதாரணம்**

- மகாவலி கங்கையின் நீளம் 335 கிலோமீற்றர் ஆகும்.
- குருணாகலுக்கும் கண்டிக்கும் இடையிலுள்ள தூரம் 42 km ஆகும்.

1000 **மீற்றர் ஒரு கிலோமீற்றராகும்.**
1000 m = 1 km

**1** கிலோமீற்றரில் எழுதுக.

**உதாரணம்** 3000 m = 3 km

(1) 2000 m (2) 4000 m (3) 5000 m
(4) 7000 m (5) 12 000 m

**2** மீற்றரில் எழுதுக.

**உதாரணம்** 4 km = 4000 m

(1) 6 km (2) 8 km (3) 15 km
(4) 30 km (5) 42 km

## 3 கிலோமீற்றரிலும் மீற்றரிலும் எழுதுக.

**உதாரணம்** 4250 m = 4000 m + 250 m
= 4 km 250 m

(1) 3080 m (2) 5050 m (3) 6215 m

(4) 17 287 m (5) 28 780 m

## 4 மீற்றரில் எழுதுக.

**உதாரணம்** 2 km 400 m = 2000 m + 400 m
= 2400 m

(1) 10 km 155 m (2) 6 km 550 m (3) 9 km 190 m

(4) 8 km 404 m (5) 17 km 60 m

## 5 கூட்டுக.

**உதாரணம் 1**

| | km | m |
|---|---|---|
| | 4 | 210 |
| + | 3 | 190 |
| | 7 | 400 |

**உதாரணம் 2**

| | km | m |
|---|---|---|
| | 16 | 35 |
| + | 3 | 80 |
| | 19 | 115 |

(1)

| | km | m |
|---|---|---|
| | 9 | 126 |
| + | 1 | 334 |
| | | |

(2)

| | km | m |
|---|---|---|
| | 12 | 100 |
| + | 8 | 200 |
| | | |

(3)

| | km | m |
|---|---|---|
| | 1 | 300 |
| + | 24 | 700 |
| | | |

(4)

| | km | m |
|---|---|---|
| | 30 | 423 |
| + | 11 | 976 |
| | | |

(5)

| | km | m |
|---|---|---|
| | 34 | 371 |
| + | 13 | 841 |
| | | |

(6)

| | km | m |
|---|---|---|
| | 24 | 54 |
| + | 3 | 62 |
| | | |

**6** வசனங்களை எழுதித் தீர்க்க.

**உதாரணம்**

ஒருவர் சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதலாம் நாளில் 32 km 400 m தூரமும் இரண்டாம் நாளில் 27 km 600 m தூரமும் சென்றுள்ளார். அவர் இரு நாட்களின் இறுதியிலும் சென்ற மொத்தத் தூரம் யாது?

| | | km | m |
|---|---|---|---|
| முதலாம் நாளில் சென்ற தூரம் | = | 32 | 400 |
| இரண்டாம் நாளில் சென்ற தூரம் | = | 27 | 600 |
| இரு நாட்களின் இறுதியிலும் சென்ற மொத்த தூரம் | = | 60 | 000 |

இரு நாட்களின் இறுதியிலும் சென்ற மொத்த தூரம் 60 km ஆகும்.

(1) ஓர் ஒப்பந்தகாரர் வீதிக்குத் தார் இடும் வேலையில் முதல் வாரத்தில் 24 km 310 m தூரமும் இரண்டாம் வாரத்தில் 17 km 700 m தூரமும் தார் இட்டார். அவர் தார் இட்ட மொத்தத் தூரம் யாது?

(2) ஒரு மின் இணைப்புத் தொழிலாளி முதலாம் நாள் 10 km 800 m தூரத்துக்கும் இரண்டாம் நாள் 6 km 500 m தூரத்துக்கும் மின் கம்பியை இணைத்தார். இரண்டு நாட்களின் இறுதியில் மின்கம்பி இணைக்கப்பட்டிருந்த மொத்தத் தூரத்தைக் காண்க.

(3) ரவி 17 km 700 m தூரத்தைப் பேருந்திலும் 4 km 500 m தூரத்தை முச்சக்கர வண்டியிலும் 800 m தூரத்தை நடந்தும் சென்றார்.

(i) பேருந்திலும் முச்சக்கர வண்டியிலும் சென்ற மொத்த தூரம் யாது?

(ii) முச்சக்கர வண்டியிலும் நடந்தும் சென்ற மொத்த தூரம் யாது?

**7** கழிக்க.

**உதாரணம் 1**

| | km | m |
|---|---|---|
| | 4 | 311 |
| − | 2 | 210 |
| | 2 | 101 |

**உதாரணம் 2**

| | km | m |
|---|---|---|
| | 35 | 594 |
| − | 12 | 751 |
| | 22 | 843 |

(1)

| km | m |
|---|---|
| 26 | 923 |
| − 15 | 733 |
| | |

(2)

| km | m |
|---|---|
| 54 | 187 |
| − 23 | 384 |
| | |

(3)

| km | m |
|---|---|
| 81 | 482 |
| − 20 | 565 |
| | |

(4)

| km | m |
|---|---|
| 77 | 144 |
| − 35 | 235 |
| | |

(5)

| km | m |
|---|---|
| 10 | 608 |
| − 8 | 711 |
| | |

(6)

| km | m |
|---|---|
| 6 | 85 |
| − 2 | 275 |
| | |

**8** **வசனங்களை எழுதித் தீர்க்க.**

**உதாரணம்**

நீர்க் குழாய்களை இடுவதற்காக வெட்ட வேண்டிய கானின் மொத்த நீளம் 21 km 410 m ஆகும். மழை காரணமாக வெட்டி முடித்த தூரம் 8 km 500 m ஆகும். மேலும் எவ்வளவு தூரம் வெட்டவேண்டி உள்ளது?

| | | km | m |
|---|---|---|---|
| வெட்ட வேண்டிய மொத்த நீளம் | = | 21 | 410 |
| வெட்டிய நீளம் | = | 8 | 500 |
| வெட்டுவதற்கு எஞ்சியுள்ள நீளம் | = | 12 | 910 |

மேலும் வெட்ட வேண்டிய தூரம் 12 km 910 m ஆகும்.


(1) கொழும்பிலிருந்து கதிர்காமத்திற்குச் செல்லும் ஒரு பேருந்து தேநீருக்காக நிறுத்தப்படும்போது 80 km 500 m ஐப் பயணித்திருந்தது. அது செல்ல வேண்டிய மொத்தத் தூரம் 278 km ஆயின், பயணத்தை நிறைவு செய்ய மேலும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்?

(2) ஒரு மோட்டார் வாகனத்தில் பயணிக்கும் உல்லாசப் பயணி முதல் நாளில் 124 km 440 m தூரம் சென்றார். இரண்டாம் நாளில் முதல் நாளிலும் 10 km 110 m தூரம் குறைவாகவே சென்றார். அவர் இரண்டாம் நாளில் பயணித்த தூரம் யாது?

(3) வடிகால் *A* இன் நீளம் 43 km ஆகும். வடிகால் *B* இன் நீளம் 87 km 400 m ஆகும். வடிகால் *B* இன் நீளம் வடிகால் *A* இன் நீளத்திலும் பார்க்க எவ்வளவினால் கூடியது ?

(4) கவின் 12 km தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. அவர் அதில் 10 km 200 m பேருந்திலும் மீதியை முச்சக்கரவண்டியிலும் செல்ல வேண்டியுள்ளது எனின், முச்சக்கரவண்டியில் பயணம் செய்ய வேண்டிய தூரம் யாது ?

# 11 பணம் I




**1** பெறுமானத்தைக் காண்க.

உதாரணம் 1

| | ரூபாய் | சதம் |
|---|---|---|
| | 4220 | 75 |
| + | 5145 | 75 |
| | 9366 | 50 |

உதாரணம் 2

| | ரூபாய் | சதம் |
|---|---|---|
| | 418 | 25 |
| – | 150 | 75 |
| | 267 | 50 |

(1)

| | ரூபாய் | சதம் |
|---|---|---|
| | 750 | 25 |
| + | 120 | 75 |
| | | |

(2)

| | ரூபாய் | சதம் |
|---|---|---|
| | 6105 | 50 |
| + | 3400 | 50 |
| | | |

(3)

| | ரூபாய் | சதம் |
|---|---|---|
| | 1350 | 25 |
| + | 1700 | 25 |
| | | |

(4)

| | ரூபாய் | சதம் |
|---|---|---|
| | 2112 | 75 |
| + | 1156 | 25 |
| | | |

(5)

| ரூபாய் | சதம் |
|---|---|
| 920 | 00 |
| − 185 | 00 |
| | |

(6)

| ரூபாய் | சதம் |
|---|---|
| 1400 | 00 |
| − 1250 | 00 |
| | |

(7)

| ரூபாய் | சதம் |
|---|---|
| 1525 | 25 |
| − 1500 | 75 |
| | |

(8)

| ரூபாய் | சதம் |
|---|---|
| 3700 | 50 |
| − 2520 | 75 |
| | |

2



450 ரூபாய்



375 ரூபாய்



775 ரூபாய்



600 ரூபாய்



895 ரூபாய்



100 ரூபாய்

கீழே ஒவ்வொரு வட்டத்தினுள்ளேயும் உள்ள பொருள்களை வாங்கும்போது செலுத்த வேண்டிய பணத்தைக் காண்க.

உதாரணம்



| ரூபாய் | சதம் |
|---|---|
| 450 | 00 |
| 375 | 00 |
| + 100 | 00 |
| 925 | 00 |

(1)



(2)



(3)



(4)



3 விலைப் பட்டியலைப் பார்வையிட்டுச் செலுத்த வேண்டிய மொத்தப் பணத்தைக் காண்க.

| பொருள் | விலை | |
|---|---|---|
| | ரூபாய் | சதம் |
| உணவுப் பெட்டி | 490 | 00 |
| புத்தகப் பை | 895 | 00 |
| பென்சிற் பெட்டி | 175 | 00 |
| சப்பாத்துச் சோடி | 775 | 00 |
| சட்டை | 1300 | 00 |
| மேற்சட்டை | 950 | 00 |
| காற்சட்டை | 1800 | 00 |

உதாரணம்

சுபுன் ஓர் உணவுப் பெட்டியையும் ஒரு புத்தகப் பையையும் வாங்கினான். அவற்றுக்காக அவன் செலுத்த வேண்டிய மொத்தப் பணத்தைக் காண்க.

| | | ரூபாய் | சதம் |
|---|---|---|---|
| உணவுப் பெட்டியின் விலை | = | 490 | 00 |
| புத்தகப் பையின் விலை | = | 895 | 00 |
| செலுத்த வேண்டிய மொத்தப் பணம் | = | 1385 | 00 |

செலுத்த வேண்டிய மொத்தப் பணம் 1385 ரூபாய் ஆகும்.

(1) பாத்திமா ஒரு பென்சிற் பெட்டியையும் ஒரு சோடி சப்பாத்தையும் வாங்கினாள். அவள் செலுத்த வேண்டிய மொத்தப் பணத்தைக் காண்க.

(2) மீனா ஒரு சட்டை, ஒரு புத்தகப் பை, ஓர் உணவுப் பெட்டி ஆகிய வற்றை வாங்கினாள். அவள் செலுத்த வேண்டிய மொத்தப் பணத்தைக் காண்க.

(3) ஒரு சோடி சப்பாத்தையும் ஒரு மேற்சட்டையையும் ஒரு காற் சட்டையும் வாங்கிய ரமேஸ் செலுத்த வேண்டிய மொத்தப் பணத்தைக் காண்க.

(4) வத்சலா ஒரு சோடி சப்பாத்து, ஒரு சட்டை, ஓர் உணவுப் பெட்டி ஆகியவற்றை வாங்கினாள். அவள் செலுத்த வேண்டிய மொத்தப் பணத்தைக் காண்க.

**4** பொருள்களின் விலைகளைப் பார்வையிட்டுப் பொருள்களை வாங்கி பணத்தைக் கொடுத்த பின்னர் கிடைக்கும் மீதிப் பணத்தைக் காண்க.


2200 **ரூபாய்**


2500 **ரூபாய்**


1650 **ரூபாய்**


1700 **ரூபாய்**


950 **ரூபாய்**

உதாரணம்

| **கொடுத்த பணம்** | **வாங்கிய பொருள்கள்** |
|---|---|
| 5000 ரூபாய் |  |

**பொருள்களின் விலைகளின் மொத்தம்**

| | ரூபாய் | சதம் |
|---|---|---|
| | 2500 | 00 |
| + | 1700 | 00 |
| | 4200 | 00 |

**மீதிப் பணம்**

| | ரூபாய் | சதம் |
|---|---|---|
| | 5000 | 00 |
| – | 4200 | 00 |
| | 800 | 00 |

| கொடுத்த பணம் | வாங்கிய பொருள்கள் |
|---|---|
| (1) 3500 ரூபாய் |  |
| (2) 4000 ரூபாய் |  |
| (3) 3000 ரூபாய் |  |
| (4) 4500 ரூபாய் |  |
| (5) 5000 ரூபாய் |  |

5 **பிரசினத்தைத் தீர்க்க.**

(1) சியானா ஒரு சட்டையை வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றாள். சட்டையின் விலை 1300 ரூபாய் ஆகும். ஆயினும் அவளிடம் 925 ரூபாய் மாத்திரம் இருந்தது. அதனை வாங்குவதற்கு அவளுக்கு மேலும் எவ்வளவு பணம் தேவை?

(2) ராதா ஒரு குடையை வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றாள். குடையை வாங்குவதற்கு அவளுக்கு மேலும் 150 ரூபாய் தேவைப்பட்டது. குடையின் விலை 450 ரூபாய் ஆயின், அவள் கடைக்குச் செல்லும்போது எடுத்துச் சென்ற பணம் எவ்வளவு?

(3) கவின் 1500 ரூபாயை எடுத்துக்கொண்டு கடைக்குச் சென்றான். 1800 ரூபாய் விலையுள்ள ஒரு காற்சட்டையை வாங்குவதற்கு அவனுக்கு மேலும் எவ்வளவு பணம் தேவை?

# 12 மீட்டல் I

**1** அடைப்பில் உள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி விடை எழுதுக.

| | | |
|---|---|---|
| 4 | | 2 |
| | 6 | |
| 0 | | 3 |

(1) 4 இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க 3 எண்களை எழுதி அவற்றின் எண்பெயரையும் எழுதுக.

(2) எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க 3 எண்களை எழுதி அவற்றின் எண்பெயரையும் எழுதுக.

(3) எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க

(i) மிகப் பெரிய எண்ணை எழுதுக.

(ii) மிகச் சிறிய எண்ணை எழுதுக.

(4) மேலே உள்ள அடைப்பில் இருக்கும் இலக்கங்களைக் கொண்டு 30 000 இற்கும் 60 000 இற்குமிடையே உள்ள 3 எண்களை எழுதுக.

**2** அட்டவணையைப் பிரதிசெய்து வெற்றிடங்களை நிரப்புக.

| எண் | இலக்கம் | இலக்கம் அமைந்துள்ள இடம் | இலக்கத்தினால் காட்டப்படும் பெறுமானம் |
|---|---|---|---|
| 3468 | 4 | ....................... | 400 |
| 12 130 | 2 | ....................... | .................. |
| 29 900 | ........ | பத்தாயிரத்தினிடம் | .................. |
| 58 047 | 7 | ஒன்றினிடம் | .................. |
| 65 100 | ........ | ....................... | 5000 |
| 90 386 | 9 | ....................... | ................ |

**3** தரப்பட்டுள்ள எண்களை விரித்து எழுதுக.

(i) 5134 = ............ + ............ + ............ + ............

(ii) 7081 = ............ + ............ + ............ + ............

(iii) 97 929 = ............ + ............ + ............ + ............ + ............

(iv) 60 326 = ............ + ............ + ............ + ............ + ............

(v) 40 090 = ............ + ............ + ............ + ............ + ............

**4** **விடைகளை எழுதுக.**

(i) ஆயிரத்தினிடம் 6, நூறினிடம் 2, பத்தினிடம் 8, ஒன்றினிடம் 7 ஆகவுள்ள எண் யாது?

(ii) பத்தாயிரத்தினிடம் 5, ஆயிரத்தினிடம் 0, நூறினிடம் 1, பத்தினிடம் 3, ஒன்றினிடம் 4 ஆகவுள்ள எண்ணை எழுதுக

(iii) ஒன்றினிடம் 7, பத்தினிடம் 9, நூறினிடம் 0, ஆயிரத்தினிடம் 6, பத்தாயிரத்தினிடம் 6 ஆகவுள்ள எண்ணை எழுதுக.

(iv) 89 199 இலும் 1 கூடிய எண் யாது?

(v) 54 036 இலும் 2 குறைந்த எண் யாது?

(vi) 29 999 இலும் 2 கூடிய எண் யாது?


**5** 24 871, 21 478, 24 718 என்னும் எண்களில்

(i) மிகப் பெரிய எண்ணை எழுதுக.

(ii) மிகச் சிறிய எண்ணை எழுதுக.

(iii) இம்மூன்று எண்களையும் ஏறுவரிசையில் எழுதுக.

**6**




வட்டத்தில் உள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி

(i) ஐந்து இலக்க எண்கள் 3 ஐ எழுதுக.

(ii) அம்மூன்று எண்களையும் இறங்குவரிசையில் எழுதுக.

7 விடைகளை எழுதுக.

| | | (1) | | | |
|---|---|---|---|---|---|
| | 2 | 6 | 4 | 3 | |
| + | 3 | 8 | 1 | 2 | |
| | | | | | |
| | | | | | |

| | | (2) | | | |
|---|---|---|---|---|---|
| | 3 | 2 | 6 | 7 | |
| + | 4 | 7 | 4 | 2 | |
| | | | | | |
| | | | | | |

| | | (3) | | | |
|---|---|---|---|---|---|
| | 6 | 0 | 3 | 7 | |
| + | 2 | 9 | 8 | 5 | |
| | | | | | |
| | | | | | |

8 கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு 5 புகையிரதங் களில் வந்த பயணிகளின் எண்ணிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைக் கொண்டு கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

| புகையிரதம் | வந்த பயணிகளின் எண்ணிக்கை |
|---|---|
| ருகுனு குமாரி | 2962 |
| உடரட்ட மெனிக்கே | 2075 |
| யாழ்தேவி | 1750 |
| சமுத்திரதேவி | 1265 |
| பொடிமெனிக்கே | 1468 |

(1) ருகுனு குமாரி, யாழ்தேவி ஆகிய இரு புகையிரதங்களிலும் வந்த பயணிகளின் மொத்த எண்ணிக்கையைக் காண்க.

(2) உடரட்ட மெனிக்கே, சமுத்திரதேவி ஆகிய புகையிரதங்களில் வந்த பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(3) ருகுனு குமாரி, உடரட்ட மெனிக்கே ஆகிய இரு புகையிரதங் களிலும் வந்த பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(4) உடரட்ட மெனிக்கே, பொடி மெனிக்கே ஆகிய புகையிரதங்களில் வந்த பயணிகளின் மொத்த எண்ணிக்கையைக் காண்க.

(5) பொடி மெனிக்கே, சமுத்திர தேவி ஆகிய இரு புகையிரதங்களிலும் வந்த பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

9. **கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

(i) 19, 22, 25, 28, ............., ............., .............

(ii) 21, 27, 33, 39, ............., ............., .............

(iii) 40, 44, 48, 52, ............., ............., .............

(iv) 75, 80, 85, 90, ............., ............., .............

(v) 108, 116, 124, 132, ............., ............., .............

(vi) 86, 93, 100, 107, ............., ............., .............

(vii) 109, 118, 127, 136, ............., ............., .............

(viii) 301, 311, 321, 331, ............., ............., .............

10. **விடைகளை எழுதுக.**

| | | (1) | | | |
|---|---|---|---|---|---|
| | 6 | 4 | 3 | 1 | |
| − | 2 | 9 | 1 | 4 | |
| | | | | | |
| | | | | | |

| | | (2) | | | |
|---|---|---|---|---|---|
| | 2 | 3 | 1 | 2 | |
| − | 1 | 6 | 0 | 3 | |
| | | | | | |
| | | | | | |


| | | (3) | | | |
|---|---|---|---|---|---|
| | 7 | 8 | 0 | 0 | |
| − | 5 | 2 | 6 | 3 | |
| | | | | | |
| | | | | | |

11. **தீர்க்க.**


(1) தேங்காய்க் குவியல் ஒன்றில் 3275 தேங்காய்கள் இருந்தன. அவற்றில் 1468 தேங்காய்கள் விற்கப்பட்டன. எஞ்சியுள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

(2) ஒரு விளையாட்டரங்கில் 1400 இரசிகர்கள் அமரலாம். அதில் 875 இரசிகர்கள் அமர்ந்துள்ளனர். இன்னும் எத்தனை இரசிகர்கள் அமரலாம்?

12 உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவினதும் என்ன பின்னமெனஎழுதுக.




13 காட்டப்பட்டுள்ள பின்னத்தைத் தரப்பட்டுள்ள உருவில் நிழற்றுக.



## 14 அட்டவணையை நிரப்புக.

| பொருள்களின் எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கையில் $\frac{1}{2}$ (அரைவாசி) இல் உள்ள பொருள்களின் எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கையில் $\frac{1}{4}$ (கால்வாசி) இல் உள்ள பொருள்களின் எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கையில் $\frac{2}{4}$ இல் உள்ள பொருள்களின் எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கையில் $\frac{3}{4}$ இல் உள்ள பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 24 பென்சில்கள் | ................ | ................ | ................ | ................ |
| 16 கதிரைகள் | ................ | ................ | ................ | ................ |
| 48 புத்தகங்கள் | ................ | ................ | ................ | ................ |
| 20 பூக்கள் | ................ | ................ | ................ | ................ |

## 15 பெருக்குக.

(1)

$$\begin{array}{r} 4\,0\,7 \\ \times \quad\;\; 2 \\ \hline \\ \hline \end{array}$$

(2)

$$\begin{array}{r} 2\,8\,0 \\ \times \quad\;\; 3 \\ \hline \\ \hline \end{array}$$

(3)

$$\begin{array}{r} 3\,4\,2 \\ \times \quad\;\; 4 \\ \hline \\ \hline \end{array}$$

(4)

$$\begin{array}{r} 9\,1\,8 \\ \times \quad\;\; 5 \\ \hline \\ \hline \end{array}$$

## 16 தரப்பட்டுள்ள விடை கிடைப்பதற்குப் பெருக்க வேண்டிய இலக்கத்தை வெற்று அடைப்பில் எழுதுக.

(1)

$$\begin{array}{r} 1\,2 \\ \times \quad \square \\ \hline 3\,6 \\ \hline \end{array}$$

(2)

$$\begin{array}{r} 2\,0 \\ \times \quad \square \\ \hline 1\,0\,0 \\ \hline \end{array}$$

(3)

$$\begin{array}{r} 2\,4\,6 \\ \times \quad \square \\ \hline 4\,9\,2 \\ \hline \end{array}$$

(4)

$$\begin{array}{r} 1\,8\,2 \\ \times \quad \square \\ \hline 7\,2\,8 \\ \hline \end{array}$$

(5)

$$\begin{array}{r} 4\,9\,3 \\ \times \quad \square \\ \hline 1\,4\,7\,9 \\ \hline \end{array}$$

**17** **பிரசினங்களைத் தீர்க்க.**

(1) ஒரு விழா மண்டபத்தின் நடைபாதையின் இரு பக்கங்களிலும் சம எண்ணிக்கைகளில் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. ஒரு பக்கத்தில் கட்டப்பட்டுள்ள கொடிகளின் எண்ணிக்கை 543 ஆகும். நடைபாதையின் இரு பக்கங்களிலும் கட்டப்பட்டுள்ள கொடிகளின் எண்ணிக்கை யாது?

(2) குமார் ஒரு மதிலைக் கட்டுவதற்குக் கொண்டு வரப்பட்ட செங்கற்களைச் சமமாக மூன்று குவியல்களாகப் பிரித்தார். ஒரு குவியலில் 493 செங்கற்கள் இருந்தனவாயின் கொண்டு வரப்பட்ட செங்கற்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(3) ரேவதியின் தற்போதைய வயது 9 ஆகும். அவளுடைய அக்காவின் வயது ரேவதியின் வயதின் இரு மடங்காகும். ரேவதியின் பாட்டியின் தற்போதைய வயது ரேவதியின் அக்காவின் தற்போதைய வயதின் நான்கு மடங்காகும்.

(i) ரேவதியின் அக்காவின் தற்போதைய வயது யாது?

(ii) ரேவதியின் பாட்டியின் தற்போதைய வயது யாது?

(4) ஒரு பாடசாலையின் பழைய மாணவர்கள் ஆரம்பப் பிரிவில் உள்ள 610 மாணவர்களுக்கு 5 பயிற்சிப் புத்தகங்கள் வீதம் வழங்கினர். அவர்கள் வழங்கிய பயிற்சிப் புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

**18** **பின்வரும் நேரங்களை ஒவ்வொரு கடிகார முகத்திலும் காட்டுக.**

(1) பன்னிரண்டு கடந்து முப்பது நிமிடம்

(2) பத்திற்கு இருபது நிமிடம்

(3) ஒன்பது கடந்து இருபத்தைந்து நிமிடம்

(4) ஏழுக்கு ஐந்து நிமிடம்

(5) மூன்று கடந்து ஐம்பத்தைந்து நிமிடம்


(1)


(2)


(3)



(4)



(5)

**19** வெற்றிடங்களை நிரப்புக.

| 12 **மணித்தியாலக் கடிகாரத்தின் நேரம்** | 24 **மணித்தியாலக் கடிகாரத்தின் நேரம்** |
|---|---|
| மு.ப. 1.30 | ........................... |
| ..................... | 08:45 |
| பி.ப. 4.15 | ........................... |
| ..................... | 22:10 |
| பி.ப. 9.45 | ........................... |
| மு.ப. 2.55 | ........................... |
| ..................... | 04:05 |

**20** நெடும் வகுத்தல் முறையில் விடைகளைப் பெறுக.

(i) 605 ÷ 5 (ii) 900 ÷ 5

(iii) 704 ÷ 5 (iv) 852 ÷ 5

**21** நெடும் வகுத்தல் முறையில் பிரசினங்களைத் தீர்க்க.

(1) ஒரு கம்பத்தில் இரு பலூன்கள் வீதம் 490 பலூன்களைக் கட்டுவதற்கு எத்தனை கம்பங்கள் தேவை?

(2) 81 விசுக்கோத்துகளை ஒரு பிள்ளைக்கு மூன்று விசுக்கோத்துகள் வீதம் எத்தனை பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம்?

(3) 60 கொடிகளைக் கொண்டு ஒவ்வொரு கொடித் தொகுதியிலும் சம எண்ணிக்கைகளில் கொடிகள் இருக்குமாறு 4 கொடித் தொகுதிகளை அமைக்கலாம். ஒரு கொடித் தொகுதியில் உள்ள கொடிகளின் எண்ணிக்கை யாது?

(4) 5 அறைகளில் 610 கதிரைகள் சம எண்ணிக்கைகளில் வைக்கப் பட்டுள்ளன. ஓர் அறையில் வைக்கப்பட்டுள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது ?

**22** **சுருக்குக.**

(1)

| | km | m |
|---|---|---|
| | 21 | 217 |
| + | 12 | 445 |
| | | |

(2)

| | km | m |
|---|---|---|
| | 15 | 600 |
| + | 2 | 400 |
| | | |

(3)

| | km | m |
|---|---|---|
| | 11 | 683 |
| + | 16 | 751 |
| | | |

(4)

| | km | m |
|---|---|---|
| | 35 | 421 |
| − | 22 | 270 |
| | | |


(5)

| | km | m |
|---|---|---|
| | 58 | 262 |
| − | 34 | 314 |
| | | |

(6)

| | km | m |
|---|---|---|
| | 20 | 209 |
| − | 8 | 426 |
| | | |

**23** சைக்கிளோட்டப் போட்டி ஒன்றில் போட்டியாளர்கள் செல்லும் பாதையில் உள்ள நகரங்களுக்கிடையே உள்ள தூரங்களைக் காட்டும் உரு கீழே தரப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.




**கட்டம் 1**
**கட்டம் 2**

(1) கட்டம் 1 இல் போட்டியாளர்கள் செல்ல வேண்டிய தூரம் யாது?

(2) கட்டம் 2 இல் போட்டியாளர்கள் செல்ல வேண்டிய தூரம் யாது?

(3) அவர்கள் போட்டியை முடிப்பதற்குச் செல்ல வேண்டிய மொத்தத் தூரம் யாது?

(4) கட்டம் 1 இன் தூரத்திற்கும் கட்டம் 2 இன் தூரத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் யாது?

(5) ஒரு போட்டியாளர் நகரம் *A* இல் போட்டியை ஆரம்பித்து நகரம் *D* இற்கு வந்து போட்டியிலிருந்து விலகுகின்றார். அப்போது அவர் சென்ற தூரம் யாது?

**24** **தீர்க்க.**

(1) மகாவலி கங்கையின் நீளம் 335 km ஆகும். மல்வத்து ஓயாவின் நீளம் 164 km ஆகும். மகாவலி கங்கை மல்வத்து ஓயாவிலும் பார்க்க எத்தனை km நீளங்கூடியது?

(2) யாத்திரிகர் குழு ஒன்று பயணத்தின்போது 42 km 150 m தூரத்தைப் பேருந்திலும் எஞ்சிய 59 km 900 m தூரத்தைப் புகையிரதத்திலும் சென்றனர்.

(i) அக்குழு பேருந்திலும் பார்க்கப் புகையிரதத்தில் எவ்வளவு தூரம் கூடுதலாக சென்றனர்?

(ii) அக்குழு சென்ற மொத்தத் தூரம் யாது?

**25** **விலைப் பட்டியலைப் பார்த்து விடை எழுதுக.**

| பொருள் | விலை | |
|---|---|---|
| | ரூபாய் | சதம் |
| பேனை | 12 | 75 |
| அழிறப்பர் | 7 | 50 |
| பயிற்சிப் புத்தகம் | 85 | 00 |
| பென்சில் | 8 | 50 |

(1) ஒரு பேனையையும் ஓர் அழிறப்பரையும் வாங்குவதற்குக் கொடுக்க வேண்டிய பணம் யாது?

(2) ஓர் அழிறப்பரையும் ஒரு பென்சிலையும் வாங்குவதற்குக் கொடுக்க வேண்டிய பணம் யாது?

(3) ஓர் அழிறப்பரின் விலைக்கும் ஒரு பயிற்சிப் புத்தகத்தின் விலைக்குமிடையே உள்ள வித்தியாசம் யாது?

(4) ஒரு பேனையின் விலையிலும் பார்க்க ஒரு பென்சிலின் விலை எவ்வளவு குறைவாகும்?

**26** மூன்று மாணவர்கள் சனிக்கிழமையிலும் ஞாயிற்றுக்கிழமையிலும் நடைபெற்ற ஒரு கல்விக் கண்காட்சியின் நுழைவுச் சீட்டுகளை விற்றுப் பெற்ற பணம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| மாணவரின் பெயர் | நுழைவுச் சீட்டுகளை விற்றுப் பெற்ற பணம் | |
|---|---|---|
| | சனிக்கிழமை | ஞாயிற்றுக்கிழமை |
| அமலன் | ரூ. 700 | ரூ. 525 |
| காதர் | ரூ. 925 | ரூ. 680 |
| கமலன் | ரூ. 700 | ரூ. 370 |


(1) அமலன் சேர்த்த மொத்தப் பணம் யாது?

(2) கமலனிலும் பார்க்கக் கூடுதலாக எவ்வளவு பணத்தை அமலன் சேர்த்துள்ளான்?

(3) மூவரிலும் குறைந்த அளவு பணத்தைச் சேர்த்துள்ள மாணவன் யார்?

(4) எந்த நாளில் கூடுதலான பணம் சேர்க்கப்பட்டது?

# 13 கனவளவும் கொள்ளளவும் I




1. உமது வகுப்பறையில் உள்ள பாத்திரங்கள் கொள்ளும் திரவ அளவுகளை லீற்றர், மில்லிலீற்றர் ஆகியவற்றில் மதிப்பிடுக. அவற்றை அளவுசாடி ஒன்றின் மூலம் அளந்து சரியா எனப் பார்க்க. அதற்கேற்ப கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புக.

| **தெரிந்தெடுத்த பாத்திரம்** | **மதிப்பிடப்பட்ட திரவ அளவு** | **சரியான திரவ அளவு** |
|---|---|---|
| நீர்ப் போத்தல் | 1 *l* 500 ml | 1 *l* 400 ml |
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |
| ............................ | ............................ | ............................ |

② கூட்டுக.

| | (1) | | (2) | | (3) | | (4) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | $l$ | ml | $l$ | ml | $l$ | ml | $l$ | ml |
| | 4 | 850 | 6 | 550 | 12 | 200 | 6 | 75 |
| + | 2 | 740 | 7 | 910 | 11 | 810 | 2 | 325 |
| | | | | | | | | |

③ வசனங்களை எழுதிப் பிரசினங்களைத் தீர்க்க.

உதாரணம்

ஒரு பாத்திரத்தில் இருந்த நீரின் அளவு 8 $l$ 825 ml ஆகும். அதனுள்ளே மேலும் 7 $l$ 270 ml நீர் சேர்க்கப்பட்டது. இப்போது பாத்திரத்தில் உள்ள நீரின் மொத்த அளவு யாது?

| | | $l$ | ml |
|---|---|---|---|
| பாத்திரத்தில் இருந்த நீரின் அளவு | = | 8 | 825 |
| சேர்த்த நீரின் அளவு | = | 7 | 270 |
| நீரின் மொத்த அளவு | = | 16 | 095 |

பாத்திரத்தில் இருந்த நீரின் மொத்த அளவு 16 $l$ 95 ml ஆகும்.

(1) ஒரு பாத்திரத்தில் 4 $l$ 400 ml சிவப்பு நிறப்பூச்சு உள்ளது. கமலன் மேலும் அதனுள் 2 $l$ 200 ml வெள்ளை நிறப்பூச்சை இட்டான். இப்போது பாத்திரத்தில் உள்ள நிறப்பூச்சின் மொத்த அளவு யாது?

(2) ஒரு வாகனத்தில் முதலாம் நாள் 4 $l$ 500 ml எரிபொருளும் இரண்டாம் நாள் 5 $l$ 750 ml எரிபொருளும் நிரப்பப்பட்டன. இரண்டு தினங்களிலும் வாகனத்தில் நிரப்பப்பட்ட எரிபொருளின் மொத்த அளவு யாது?

(3) ஒரு பாத்திரத்தில் 6 $l$ 250 ml பாலும் இன்னொரு பாத்திரத்தில் 4 $l$ 900 ml பாலும் இருந்தது. இரண்டு பாத்திரங்களிலும் இருந்த பாலின் மொத்த அளவு யாது?

(4) ஒரு தேங்காயெண்ணெய் விற்பனை நிலையத்தில் முதலாம் நாளில் 10 $l$ 600 ml தேங்காயெண்ணெயும் இரண்டாம் நாளில் 11 $l$ 750 ml தேங்காயெண்ணெயும் விற்கப்பட்டன. இரண்டு நாட்களிலும் விற்கப்பட்ட தேங்காயெண்ணெயின் மொத்த அளவு யாது?

4. **கழிக்க**

(1)

| | *l* | ml |
|---|---|---|
| | 7 | 450 |
| − | 5 | 325 |
| | | |

(2)

| | *l* | ml |
|---|---|---|
| | 6 | 410 |
| − | 3 | 700 |
| | | |

(3)

| | *l* | ml |
|---|---|---|
| | 16 | 125 |
| − | 13 | 200 |
| | | |

(4)

| | *l* | ml |
|---|---|---|
| | 14 | 50 |
| − | 11 | 850 |
| | | |

5. **வசனங்களை எழுதித் தீர்க்க.**

**உதாரணம்**

15 *l* 800 ml நீரைக் கொண்டிருந்த ஒரு தாங்கியிலிருந்து 8 *l* 750 ml நீர் அகற்றப்பட்டது. தாங்கியில் எஞ்சிய நீரின் அளவு யாது?

| | | *l* | ml |
|---|---|---|---|
| தாங்கியில் இருந்த நீரின் அளவு | = | 15 | 800 |
| அகற்றிய நீரின் அளவு | = | 8 | 750 |
| எஞ்சிய நீரின் அளவு | = | 7 | 050 |

தாங்கியில் எஞ்சியிருந்த நீரின் அளவு 7 *l* 50 ml ஆகும்.

(1) ஒரு தாங்கியில் 17 *l* 650 ml பால் இருந்தது. அதிலிருந்து 12 *l* 750 ml அளவு பால் விற்கப்பட்டது. எஞ்சிய பாலின் அளவு யாது?

(2) விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட 7 *l* 500 ml தேங்காய் யெண்ணெயில் 1 *l* 900 ml தேங்காய்யெண்ணெய் எஞ்சியிருந்தது. விற்பனையாகிய தேங்காய்யெண்ணெயின் அளவு யாது?

(3) குளிர்பான விற்பனை நிலையம் ஒன்றில் குறித்த ஒரு தினத்தில் 14 *l* 200 ml தோடம்பழப் பானமும் 10 *l* 150 ml விளாம்பழப் பானமும் விற்பனை செய்யப்பட்டன. விளாம்பழப் பானத்திலும் கூடுதலாக எவ்வளவு தோடம்பழப் பானம் விற்பனை செய்யப்பட்டுள்ளது?

(4) 25 *l* நீரைக் கொள்ளக்கூடிய ஒரு கொள்கலனில் 16 *l* 500 ml நீர் உள்ளது. கொள்கலனை முற்றாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீரை ஊற்ற வேண்டும்?

# 14 நிறைகளை அளத்தல் I

நிறைகளை அளப்பதற்கு வெவ்வேறு தராசுகளைப் பயன்படுத்துவர்.



தட்டுத் தராசு



விற்றராசு



சமையலறைத் தராசு



இலத்திரனியல் தராசு



நிலத் தராசு

1. ஆசிரியர் வெவ்வேறு அளவுகளில் மணல் நிரப்பப்பட்ட 4 பொதிகளை உங்களிடம் வழங்குவார். அப்பொதிகளை $A, B, C, D$ எனப் பெயரிடுக. ஒவ்வொரு பொதியினதும் நிறையை மதிப்பிடுக. ஒரு தராசைப் பயன்படுத்தி மதிப்பீடுகள் சரியானவையா எனப் பார்க்க. இதற்கேற்ப கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புக.

| பொதி | மதிப்பிடப்பட்ட நிறை (அனுமானித்த நிறை) | உண்மையான நிறை |
|---|---|---|
| $A$ | .......................... | .......................... |
| $B$ | .......................... | .......................... |
| $C$ | .......................... | .......................... |
| $D$ | .......................... | .......................... |

2 கீழே தரப்பட்டுள்ள தராசுகளில் உள்ள பொருள்களின் நிறைகளை எழுதுக.

(1)




உருளைக்கிழங்குகளின் நிறை

...................................


(2)




அப்பிள்களின் நிறை

.......................................

(3)




பத்திரிகைப் பொதியின் நிறை

.......................................

3 விடை எழுதுக.

**உதாரணம் 1**

| | kg | g |
|---|---|---|
| | 5 | 500 |
| + | 3 | 750 |
| | 9 | 250 |

**உதாரணம் 2**

| | kg | g |
|---|---|---|
| | 8 | 75 |
| + | 2 | 51 |
| | 10 | 126 |

(1)

| | kg | g |
|---|---|---|
| | 3 | 225 |
| + | 1 | 190 |
| | | |

(2)

| | kg | g |
|---|---|---|
| | 25 | 900 |
| + | 45 | 500 |
| | | |

(3)

| | kg | g |
|---|---|---|
| | 52 | 500 |
| + | 33 | 500 |
| | | |

(4)

| | kg | g |
|---|---|---|
| | 4 | 250 |
| + | 5 | 825 |
| | | |

(5)

| | kg | g |
|---|---|---|
| | 11 | 750 |
| + | 13 | 250 |
| | | |

(6)

| | kg | g |
|---|---|---|
| | 5 | 50 |
| + | 3 | 50 |
| | | |

4 வசனங்களை எழுதித் தீர்க்க.

**உதாரணம்**

குமுதினி வாங்கிய தர்ப்பூசணியின் நிறை 1 kg 800 g ஆகும். கண்ணன் வாங்கிய தர்ப்பூசணியின் நிறை 1 kg 750 g ஆகும். இருவரும் வாங்கிய தர்ப்பூசணிகளின் மொத்த நிறை யாது?

| | | kg | g |
|---|---|---|---|
| குமுதினி வாங்கிய தர்ப்பூசணியின் நிறை | = | 1 | 800 |
| கண்ணன் வாங்கிய தர்ப்பூசணியின் நிறை | = | 1 | 750 |
| இருவரும் வாங்கிய தர்ப்பூசணிகளின் மொத்த நிறை | = | 3 | 550 |

இருவரும் வாங்கிய தர்ப்பூசணிகளின் மொத்த நிறை 3 kg 550 g ஆகும்.

(1) அரிசிப் பொதி ஒன்றின் நிறை 5 kg 500 g ஆகும். இன்னொரு அரிசிப் பொதியின் நிறை 8 kg 750 g ஆகும். அரிசிப் பொதிகளின் மொத்த நிறை யாது?

(2) ஒரு சாக்கில் இருந்த தேயிலைக் கொழுந்தின் நிறை 21 kg 250g ஆகும். அதனுடன் 17 kg 750 g கொழுந்து சேர்க்கப்பட்டது. தற்போது சாக்கில் உள்ள தேயிலைக் கொழுந்தின் மொத்த நிறை யாது?

(3) ஒரு வாழைச்சீப்பின் நிறை 2 kg 850 g ஆகும். இன்னொரு வாழைச்சீப்பின் நிறை 1 kg 300 g ஆகும். இரண்டு வாழைச் சீப்புகளினதும் மொத்த நிறை யாது?

(4) ஒரு வியாபாரி விற்பதற்காக வாங்கிய 12 kg 750 g மிளகுடன் வீட்டுத்தோட்டத்திலிருந்து பெற்ற 2 kg 500 g மிளகையும் சேர்த்தார். தற்போது அவரிடம் உள்ள மிளகின் மொத்த நிறை யாது?

**5 தீர்க்க.**

உதாரணம்

| | kg | g |
|---|---|---|
| | 4 | 350 |
| − | 1 | 750 |
| | 2 | 600 |

(1)

| | kg | g |
|---|---|---|
| | 12 | 840 |
| − | 4 | 510 |
| | | |

(2)

| | kg | g |
|---|---|---|
| | 6 | 320 |
| − | 2 | 150 |
| | | |

(3)

| | kg | g |
|---|---|---|
| | 15 | 400 |
| − | 9 | 500 |
| | | |

(4)

| | kg | g |
|---|---|---|
| | 39 | 670 |
| − | 23 | 765 |
| | | |

**6** **வசனங்களை எழுதித் தீர்க்க.**

**உதாரணம்**

ஒரு பூசணிக்காயின் நிறை 4 kg 200 g ஆகும். அதிலிருந்து ஒரு பகுதியை வெட்டி விற்பனை செய்த பின்னர் எஞ்சிய பகுதியின் நிறை 2 kg 90 g ஆகும். விற்பனை செய்த பகுதியின் நிறை யாது?

| | | kg | g |
|---|---|---|---|
| பூசணிக்காயின் நிறை | = | 4 | 200 |
| எஞ்சிய பகுதியின் நிறை | = | 2 | 090 |
| விற்பனை செய்த பகுதியின் நிறை | = | 2 | 110 |

விற்பனை செய்த பகுதியின் நிறை 2 kg 110 g ஆகும்.

(1) ஒரு வியாபாரி 65 kg 700 g நிறையுள்ள வத்தாளைக் கிழங்குக் குவியலிலிருந்து 31 kg 800 g வத்தாளைக் கிழங்கை விற்பனை செய்தார். எஞ்சிய வத்தாளைக் கிழங்கின் நிறை யாது?

(2) அண்ணனின் நிறை 46 kg 250 g ஆகும். தம்பியின் நிறை 32 kg 500 g ஆகும். அண்ணன் தம்பியிலும் பார்க்க எவ்வளவு நிறையால் கூடியவன்?

(3) விற்பனைக்காகப் பத்திரிகைகள் 50 kg நிறையுள்ள கட்டுகளாகப் பொதிசெய்யப்படுகின்றன. ஒரு குவியலில் 42 kg 750 g நிறையுள்ள பத்திரிகைகள் உள்ளன. ஒரு பத்திரிக்கை கட்டைச் செய்வதற்கு மேலும் தேவைப்படும் பத்திரிகைகளின் நிறை யாது?

(4) ஒரு வியாபாரி முரளியிடமிருந்து 20 kg 250 g முள்ளங்கியையும் ரவியிடமிருந்து 15 kg 750 g முள்ளங்கியையும் வாங்கினார். அவர் ரவியை விட எவ்வளவு நிறையுள்ள முள்ளங்கியை முரளியிடமிருந்து மேலதிகமாக வாங்கினார்?

# 15 பிரசினங்களைத் தீர்த்தல் I

**உதாரணம்**

செய்தித்தாள்களை விற்கும் வர்த்தகர் ஒருவர் ஒரே வகையான செய்தித்தாள்களில் 785 ஐச் சனிக்கிழமையிலும் 516 ஐ ஞாயிற்றுக் கிழமையிலும் விற்றார். அவர் இரு நாட்களிலும் விற்ற செய்தித்தாள்களின் மொத்த எண்ணிக்கை யாது?

$$\begin{array}{r} 785 \\ +\ 516 \\ \hline 1301 \\ \hline \end{array}$$

இரு நாட்களிலும் விற்ற செய்தித்தாள்களின் மொத்த எண்ணிக்கை 1301 ஆகும்.

**1 தீர்க்க.**

(1) ஒரு நெற்களஞ்சியத்தில் 4675 கிலோகிராம் நெல் உள்ளது. அதில் மேலும் 1430 கிலோகிராம் நெல் களஞ்சியப்படுத்தி வைக்கப் படுகின்றது. இப்போது அக்களஞ்சியத்தில் உள்ள நெல்லின் அளவு யாது?

(2) சிகிரியாவைப் பார்ப்பதற்கு ஒரு குறித்த வாரத்தின் இறுதியில் சனிக்கிழமை வந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 3515 ஆகும். ஞாயிற்றுக்கிழமை வந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 2987 ஆகும். அந்த இரு நாட்களிலும் வந்த உல்லாசப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(3) ஒரு மின் கேத்தலின் விலை ரூ. 4750 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. விலை அதிகரிப்புக் காரணமாக அதன் விலை ரூ. 275 இனால் அதிகரிக்கின்றது. தற்போது மின் கேத்தலின் புதிய விலை யாது?

(4) முற்றாக நிரம்பியிருந்த ஒரு நீர்த் தொட்டியிலிருந்து 2725 $l$ நீர் விநியோகிக்கப்பட்டுள்ளது. தொட்டியில் எஞ்சியிருக்கும் நீரின் அளவு 3075 $l$ ஆகும். நீர்த் தொட்டி முற்றாக நிரம்பியிருந்தபோது அதில் இருந்த நீரின் அளவு யாது?

2 தீர்க்க.

**உதாரணம்**

வீட்டின் கூரையை முற்றாக வேய்வதற்கு 3465 ஓடுகள் தேவை. முதலில் 2500 ஓடுகள் கொண்டு வரப்பட்டன. கூரையை முற்றாக வேய்வதற்கு இன்னும் எத்தனை ஓடுகள் தேவை?

$$\begin{array}{r} 3465 \\ -\ 2500 \\ \hline 965 \\ \hline \end{array}$$

இன்னும் தேவைப்படும் ஓடுகளின் எண்ணிக்கை 965 ஆகும்.

(1) ஒரு வயலிற்கு நீரைக் கொண்டு செல்வதற்கு 1250 m நீளமுள்ள ஒரு கால்வாயைக் கட்ட வேண்டியுள்ளது. கால்வாயை முற்றாகக் கட்டி முடிப்பதற்கு மேலும் 645 m உள்ளது. இப்போது கால்வாயில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பகுதியின் நீளம் யாது?

(2) ஒரு லொறியில் 2750 செங்கற்கள் ஏற்றப்பட்டுள்ளன. ஒரு திராக்ரரில் 1275 செங்கற்கள் ஏற்றப்பட்டுள்ளன. திராக்ரரிலும் பார்க்க லொறியில் கூடுதலாக ஏற்றப்பட்டுள்ள செங்கற்களின் எண்ணிக்கை யாது?

(3) ஒரு நடனக் காட்சியைப் பார்ப்பதற்காக ஒரு மண்டபத்தில் 1750 கதிரைகள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் அமர்ந்துள்ள இரசிகர்களின் எண்ணிக்கை 987 ஆகும். இன்னும் எத்தனை இரசிகர்கள் அமர்வதற்குக் கதிரைகள் எஞ்சியுள்ளன?

(4) சைக்கிள் ஒன்றின் விலை 5750 ரூபாய் ஆகும். கமலிடம் உள்ள பணம் 3825 ரூபாய் ஆகும். சைக்கிளை வாங்குவதற்குக் கமலுக்கு மேலும் எவ்வளவு பணம் தேவை?

(5) 3985 மூக்குக் கண்ணாடிகளில் 2394 மூக்குக் கண்ணாடிகள் விநியோகிக்கப்பட்டன. எஞ்சியிருந்த மூக்குக் கண்ணாடிகளின் எண்ணிக்கை யாது?

## 3 தீர்க்க.

**உதாரணம்**

ஒரு புத்தகக் கடையில் முதலாம் நாளில் 290 பயிற்சிப் புத்தகங்களும் இரண்டாம் நாளில் 460 பயிற்சிப் புத்தகங்களும் மூன்றாம் நாளில் 570 பயிற்சிப் புத்தகங்களும் விற்கப்பட்டன. முதல் இரு நாட்களிலும் விற்கப்பட்ட பயிற்சிப் புத்தகங்களின் எண்ணிக்கை மூன்றாம் நாளில் விற்கப்பட்ட பயிற்சிப் புத்தகங்களின் எண்ணிக்கையிலும் எவ்வளவினால் கூடியது?

**படிமுறை** 1

$$\begin{array}{r} 290 \\ +\ 460 \\ \hline 750 \\ \hline \end{array}$$

**படிமுறை** 2

$$\begin{array}{r} 750 \\ -\ 570 \\ \hline 180 \\ \hline \end{array}$$

மூன்றாம் நாள் விற்கப்பட்ட பயிற்சிப் புத்தகங்களின் எண்ணிக்கை 180 இனால் கூடியது.

(1) கசுன் 400 மாம்பழங்களையும் கவிதா 350 மாம்பழங்களையும் குமார் 560 மாம்பழங்களையும் வாங்கினர். கசுனும் கவிதாவும் வாங்கிய மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமனாவதற்குக் குமார் மேலும் எத்தனை மாம்பழங்களை வாங்க வேண்டும்?

(2) ஒரு புகையிரதத்தில் 750 பயணிகள் இருந்தனர். முதல் புகையிரத நிலையத்தில் 125 பயணிகள் இறங்கும் அதே வேளை 290 பயணிகள் ஏறினர். இப்போது புகையிரதத்தில் உள்ள பயணிகளின் எண்ணிக்கை யாது?

(3) 350 *l* நீர் இடப்படத்தக்க ஒரு தாங்கியில் இரு தடவைகளில் 50 *l*, 95 *l* நீர் இடப்பட்டது. அத்தாங்கியில் இன்னும் எவ்வளவு நீரை இடலாம்?

(4) விளையாட்டுப் போட்டி ஒன்றில் மூன்று இல்லங்கள் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் விவரம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| **இல்லத்தின் பெயர்** | **பெற்றுக் கொண்ட புள்ளிகள்** |
|---|---|
| சேரன் | 693 |
| சோழன் | 597 |
| பாண்டியன் | 765 |


சேரன், சோழன் இல்லங்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் மொத்த எண்ணிக்கை பாண்டியன் இல்லம் பெற்றுக் கொண்ட புள்ளிகளை விட எவ்வளவினால் கூடியது?

(5) கீதா 750 g நிறையுள்ள ஒரு பூசணிக்காயை 3 துண்டுகளாக வெட்டினார். அவற்றில் இரு துண்டுகளின் நிறை 290 g, 270 g ஆகும். எஞ்சிய துண்டின் நிறை யாது?

(6) மூன்று தென்னந்தோட்டங்களில் பிடுங்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கைகள் 1500, 1445, 2550 ஆகும். முதலாம் தென்னந் தோட்டத்திலும் இரண்டாம் தென்னந்தோட்டத்திலும் பிடுங்கப் பட்ட தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை மூன்றாம் தென்னந் தோட்டத்தில் பிடுங்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கையிலும் எவ்வளவினால் கூடியது?

# 16 திண்மப் பொருள்களும் வடிவங்களும்


1 பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.





| திண்மப் பொருள் | திண்மப் பொருளின் வடிவத்தில் பார்க்கத்தக்க உருக்களின் எண்ணிக்கை |
|---|---|
| சதுரமுகி | |
| கனவுரு | |
| நான்முகி | |
| உருளை | |

v s©¨ ö£õ¸ÒP Î ß C¯À¦Pø Í CÚ [Põ s ÷£õ®.


**கனவுரு**







ஒரு கனவுருக்கு
முகங்கள் 6
விளிம்புகள் 12
உச்சிகள் 8




**உருளை**






ஒரு உருளைக்கு
முகங்கள் 2
வளைந்த விளிம்புகள் 2

2. திண்மப் பொருள்களின் இயல்புகளைக் கொண்டு அட்டவணையை நிரப்புக.

| வடிவம் | திண்மப் பொருளின் பெயர் | விளிம்புகளின் எண்ணிக்கை | முகங்களின் எண்ணிக்கை | உச்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
|  | | | | |
|  | | | | |
|  | | | | |


v s ©¨ ö£õ ¸ ÒP Î ß ©õv ›Pø Í A ø©¨ ÷£õ®.

**சதுரமுகி**




- பின்னிணைப்பு 1 இல் உள்ள உருவை வெட்டித் தடித்த தாளில் ஒட்டுக.
- ஒரு சதுரமுகி அமையுமாறு முறிந்த கோடுகள் வழியே மடிக்க.
- நிறப் பகுதிகளை உள்ளே மடித்து ஒட்டுக.

**கனவுரு**




- பின்னிணைப்பு 2 இல் உள்ள உருவை வெட்டித் தடித்த தாளில் ஒட்டுக.
- ஒரு கனவுரு அமையுமாறு முறிந்த கோடுகள் வழியே மடிக்க.
- நிறப் பகுதிகளை உள்ளே மடித்து ஒட்டுக.

**நான்முகி**




- பின்னிணைப்பு 3 இல் உள்ள உருவை வெட்டித் தடித்த தாளில் ஒட்டி விடுக.
- ஒரு நான்முகி அமையுமாறு முறிந்த கோடுகள் வழியே மடிக்க.
- நிறப் பகுதிகளை உள்ளே மடித்து ஒட்டுக.

**உருளை**




- பின்னிணைப்பு 3 இல் உள்ள உருவை வெட்டித் தடித்த தாளில் ஒட்டுக.
- $A$, $B$, $C$ ஆகிய மூன்று பகுதிளையும் வேறுவேறாக வெட்டுக.
- அவற்றைப் பயன்படுத்தி உருளையை அமைக்க.





3 ஒரு சதுரமுகி செய்யப்படத்தக்க வலைகளைத் தெரிந்தெடுத்து அவற்றின் எண்களைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுக.




4 ஒரு கனவுரு செய்யப்படத்தக்க வலைகளைத் தெரிந்தெடுத்து அவற்றின் எண்களைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுக.



5 கீழே தரப்பட்டுள்ள உருக்களைப் பார்த்து அட்டவணையை நிரப்புக.

| **திண்மப் பொருள்** | **சதுர முகங்களின் எண்ணிக்கை** | **செவ்வக முகங்களின் எண்ணிக்கை** | **முக்கோண முகங்களின் எண்ணிக்கை** | **வட்ட முகங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
|  நான்முகி | | | | |
|  கனவுரு | | | | |
|  சதுரமுகி | | | | |
|  உருளை | | | | |

## கிடைத் தளத்தையும் நிலைக்குத்துத் தளத்தையும் இனங்காண்போம்.




சுவர் நிலைக்குத்தானது.

வீட்டுத் தளம் கிடையானது.

ஒரு தளத்தின் கிடையியல்பை இனங்காண்பதற்கு **நீர்மட்டம்** பயன்படுத்தப்படுகின்றது.



**நீர்மட்டம்**



**ஒரு மேசை மீது வைக்கப்பட்ட நீர்மட்டம்**

ஒரு தளத்தின் நிலைக்குத்தியல்பை இனங்காண்பதற்குத் **தூக்குக்குண்டு** பயன்படுத்தப்படுகின்றது.



**தூக்குக்குண்டு**




**ஒரு சுவரின் நிலைக்குத்தியல்பைக் காணல்**

# 17 தரவுகளைக் கையாளுதல் I

1 ஒரு மணித்தியாலத்தில் சிற்றுண்டிச்சாலை ஒன்றில் விற்பனை செய்யப்பட்டுள்ள இனிப்புப் பண்டங்களின் விவரம் கீழேயுள்ள நிரல் வரைபில் தரப்பட்டுள்ளது. அதிலிருந்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

**சிற்றுண்டிச்சாலையில் விற்பனை செய்யப்பட்டுள்ள இனிப்புப் பண்டங்கள்**




(1) கூடுதலாக விற்பனை செய்யப்பட்டுள்ள இனிப்புப் பண்ட வகை யாது ?

(2) விற்பனை செய்யப்பட்டுள்ள கேசரித் துண்டுகளின் எண்ணிக்கை யாது ?

(3) சமனான எண்ணிக்கையில் விற்பனை செய்யப்பட்டுள்ள இனிப்புப் பண்டங்களின் எண்ணிக்கை யாது ?

(4) லட்டின் எண்ணிக்கையை விடக் கூடுதலாக எவ்வளவு தேன்குழல் விற்பனை செய்யப்பட்டுள்ளது ?

2 ஒரு வாகனத் தரிப்பிடத்துக்கு ஒரு மணித்தியாலயத்தில் வந்த வாகனங்கள் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது. இத் தகவல்களை ஒரு நிரல் வரைபில் காட்டுக.


| வாகனத்தின் வகை | வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மோட்டார்க் கார் | 7 |
| மோட்டார்ச் சைக்கிள் | 10 |
| வான் | 5 |
| முச்சக்கரவண்டி | 12 |

குறித்த தினத்தில் பழ விற்பனைக் கூடம் ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட பழங்களின் வகைகளையும் எண்ணிக்கைகளையும் பற்றிய தகவல் கீழே தரப்பட்டுள்ளது.

| பழ வகை | எண்ணிக்கை |
|---|---|
| விளாம்பழம் | 10 |
| அன்னாசிப் பழம் | 14 |
| மாம்பழம் | 16 |
| தோடம்பழம் | 10 |
| தர்ப்பூசணி | 12 |
| பப்பாசி | 7 |

இத்தகவல்களை நிரல் வரைபு ஒன்றில் வரைவதை இலகுவாக்குவதற்காக நிரல் வரைபில் ஒரு கட்டத்தின் மூலம் 2 பழங்கள் குறிக்கப்படுகின்றன.

**விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்யப்பட்ட பழங்கள்**




(1) கூடுதலாக விற்பனை செய்யப்பட்டுள்ள பழவகை யாது ? மாம்பழம்

(2) குறைவாக விற்பனை செய்யப்பட்டுள்ள பழவகை யாது? பப்பாசிப்பழம்


(3) சமனான எண்ணிக்கையில் விற்பனை செய்யப்பட்டுள்ள இரு பழவகைகளும் யாவை? விளாம்பழம், தோடம்பழம்

3 ஒரு பாடசாலை நூலகத்தில் இருந்த புத்தகங்களின் வகைகள் பற்றிய விவரங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| **புத்தகங்களின் வகை** | **புத்தகங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| சிறுவர் கதைகள் | 22 |
| சிறுவர் பாடல்கள் | 19 |
| நீதிக் கதைகள் | 20 |
| உவமைக் கதைகள் | 12 |
| சிறுவர் சஞ்சிகைகள் | 16 |

*பயிற்சிப் புத்தகத்தில் ஒரு கட்டம் 2 புத்தகங்களைக் குறிக்கும் விதமாக மேலேயுள்ள தகவல்களை ஒரு நிரல் வரைபில் காட்டுக.*

4 ஒரு குறித்த மாணவர் குழுவிடம் அவர்கள் விரும்பும் உணவு வகை பற்றிப் பெறப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.




ஒரு கட்டத்தினால் 5 மாணவர்கள் குறிக்கப்பட்டுள்ளனர்.

(1) *மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் விரும்பும் உணவு வகை யாது ?*

(2) *மிகக் கூடிய எண்ணிக்கையிலான மாணவர்கள் விரும்பும் உணவு வகை யாது ? அம்மாணவர்களின் எண்ணிக்கை யாது ?*

(3) *மாணவர்கள் சமனான எண்ணிக்கையில் விரும்பும் இரு உணவு வகைகளும் யாவை ?*

5 ஒரு நாற்றுமேடையில் உள்ள சில நாற்று வகைகள் பற்றிய தகவல்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| நாற்று வகை | நாற்றுகளின் எண்ணிக்கை |
|---|---|
| *மாமரம்* | 45 |
| *மிளகாய்* | 60 |
| *எலுமிச்சை* | 50 |
| *கத்தரி* | 30 |
| *தக்காளி* | 45 |

(1) பயிற்சிப் புத்தகத்தில் ஒரு கட்டம் 5 நாற்றுகளைக் குறிக்கும் வகையில் மேலேயுள்ள தகவல்களை ஒரு நிரல் வரைபில் காட்டுக.

(2) நிரல் வரைபில் குறிக்கப்பட்டுள்ள தகவல்கள் விவரிக்கப்படுமாறு 5 வாக்கியங்களை எழுதுக.

**6** **மாணவர்கள் விளையாடுவதற்காகக் கொண்டுவரப்பட்ட மூன்று நிறங்களிலான பந்துகள் பற்றிய விபரம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.**


| பந்தின் நிறம் | பந்துகளின் எண்ணிக்கை |
|---|---|
| மஞ்சள் | 30 |
| சிவப்பு | 10 |
| நீலம் | 20 |

பயிற்சிப் புத்தகத்தில் ஒரு கட்டத்தினால் குறிக்கப்படும் பந்துகளின் எண்ணிக்கையை உகந்தவாறு தெரிந்தெடுத்து மேற்குறித்த தகவல்களை ஒரு நிரல் வரைபில் காட்டுக.

# 18 தசமம்

## தசம எண்களை அறிந்து கொள்வோம்.

- கீழேயுள்ள கடதாசிக் கீலம் 10 சமனான பகுதிகளாகப் பிரிக்கப் பட்டு ஒரு பகுதி நிறந்தீட்டப்பட்டுள்ளது. நிறந்தீட்டிய அப்பகுதி முழுப் பகுதியில் பத்திலொரு பங்காகும். அது பின்னமாக $\frac{1}{10}$ என எழுதப்படும்.




$\frac{1}{10}$ ஐ இன்னொரு விதமாகக் காட்ட முடியும். அது 0.1 ஆகும். இது தசம எண்ணாகும். **இதனைப் பூச்சியம் தசம்** ஒன்று என வாசிப்போம்.

$$\frac{1}{10} = 0.1$$

**உதாரணம்**

உருவில் நிறந்தீட்டப்பட்ட பகுதிகளைத் தசம எண்ணாக எழுதுவோம்.


(1)



நிறந்தீட்டிய அளவானது
கடதாசிக் கீலத்தின் $\frac{2}{10}$ ஆகும்.

$\frac{2}{10} = 0.2$


(2)



நிறந்தீட்டிய அளவானது
கடதாசிக் கீலத்தின் $\frac{3}{10}$ ஆகும்.

$\frac{3}{10} = 0.3$

**1**




(1) மேலேயுள்ள உரு எத்தனை சமனான பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது?

(2) நிறந்தீட்டிய பகுதிகளின் எண்ணிக்கை யாது?

(3) (i) நிறந்தீட்டிய பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.
(ii) அப்பின்னத்தை ஒரு தசம எண்ணாக எழுதுக.


**2** ஒவ்வோர் உருவிலும் நிறந்தீட்டப்பட்ட பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.

**உதாரணம்**



0.6

(1)




..........................

(2)




..........................

(3)




..........................

(4)




..........................

(5)



..........................

(6)



..........................

(3) ஒவ்வொரு பின்னத்தையும் தசம எண்ணாக எழுதுக.

உதாரணம் : $\frac{4}{10} = 0.4$






(1) $\frac{5}{10}$ (2) $\frac{2}{10}$ (3) $\frac{8}{10}$

(4) ஒவ்வொரு தசம எண்ணையும் பின்னமாக எழுதுக.

உதாரணம் : $0.6 = \frac{6}{10}$

(1) 0.7 (2) 0.9 (3) 0.3

(5) அட்டவணையை நிரப்புக.

| உருவ வகைக் குறிப்பீடு | தசம எண் | வாசிக்கும் முறை |
|---|---|---|
|  | 0.2 | பூச்சியம் தசம் இரண்டு |
|  | 0.5 | ........................................... |
|  | .................... | ........................................... |
|  | .................... | பூச்சியம் தசம் மூன்று |
|  | 0.6 | ........................................... |

# 19 நீளமும் தூரமும் II



**1 மீற்றர் = 100 சென்றிமீற்றர்**

**1 m = 100 cm**

1. பிரதி செய்து விடை எழுதுக.

**உதாரணம் 1**

| | m | cm |
|---|---|---|
| | 38 | 50 |
| + | 13 | 70 |
| | 52 | 20 |

**உதாரணம் 2**

| | m | cm |
|---|---|---|
| | 16 | 25 |
| – | 7 | 50 |
| | 8 | 75 |

(1)

| | m | cm |
|---|---|---|
| | 41 | 35 |
| + | 12 | 15 |
| | | |

(2)

| | m | cm |
|---|---|---|
| | 33 | 44 |
| + | 91 | 61 |
| | | |

(3)

| | m | cm |
|---|---|---|
| | 73 | 51 |
| + | 21 | 49 |
| | | |

(4)

| | m | cm |
|---|---|---|
| | 85 | 53 |
| – | 11 | 52 |
| | | |

(5)

| | m | cm |
|---|---|---|
| | 47 | 36 |
| – | 31 | 54 |
| | | |

(6)

| | m | cm |
|---|---|---|
| | 67 | 72 |
| – | 18 | 34 |
| | | |

2 வசனங்களை எழுதித் தீர்க்க.

**உதாரணம் 1**

ஒரு சுவர் அலங்காரத்துக்காக மஞ்சள் நிற றிபனின் 8 m 50 cm உம் சிவப்பு நிற றிபனின் 5 m 80 cm உம் தேவைப்பட்டன. அலங்காரத்துக்குத் தேவையான றிபனின் மொத்த நீளம் யாது?

| | | m | cm |
|---|---|---|---|
| மஞ்சள் றிபனின் நீளம் | = | 8 | 50 |
| சிவப்பு றிபனின் நீளம் | = | 5 | 80 |
| றிபன்களின் மொத்த நீளம் | = | 14 | 30 |

றிபன்களின் மொத்த நீளம் 14 m 30 cm ஆகும்.

**உதாரணம் 2**

ஒரு மண்டபத்தின் நீளம் 12 m 25 cm உம் அகலம் 8 m 50 cm உம் ஆகும். மண்டபத்தின் நீளம், அகலம் ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசம் யாது?

| | | m | cm |
|---|---|---|---|
| மண்டபத்தின் நீளம் | = | 12 | 25 |
| மண்டபத்தின் அகலம் | = | 8 | 50 |
| நீளத்திற்கும் அகலத்திற்குமிடையே உள்ள வித்தியாசம் | = | 3 | 75 |

நீளத்திற்கும் அகலத்திற்குமிடையே உள்ள வித்தியாசம் 3 m 75 cm ஆகும்.

(1) சட்டைகளைத் தைப்பதற்காக ஒரு வகைத் துணியில் அக்காவுக்கு 2 m 25 cm துணியும் தங்கைக்கு 1 m 50 cm துணியும் தேவைப் பட்டன. சட்டைகளைத் தைப்பதற்குத் தேவையான துணியின் மொத்த நீளம் யாது?

(2) சுனில் முதலாம் நாளில் ஒரு மதிலில் 5 m 75 cm நீளத்தைக் கட்டினான். அவன் இரண்டாம் நாளில் மேலும் 4 m 25 cm ஐக் கட்டினான். இரண்டாம் நாளின் இறுதியில் கட்டப்பட்டிருந்த மதிலின் மொத்த நீளம் யாது?

(3) ஒரு விவசாயிக்கு முதலாவது பண்ணையின் வேலியை அமைப்பதற்காக 30 m 80 cm நீளமுள்ள முட்கம்பியும் இரண்டாம் பண்ணையின் வேலியை அமைப்பதற்காக 50 m 30 cm நீளமுள்ள முட்கம்பியும் தேவைப்பட்டன. இரண்டு பண்ணைகளிலும் வேலி அமைப்பதற்குத் தேவையான முட்கம்பியின் மொத்த நீளம் யாது?

(4) 8 m 80 cm நீளமுள்ள ஒரு கயிற்றினால் ஆடைகளை உலர வைப்பதற்கான ஒரு கொடி கட்டப்பட்ட பின்னர் 2 m 80 cm கயிறு எஞ்சியிருந்தது. கொடி கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள கயிற்றின் நீளம் யாது ?

(5) 5 m 80 cm நீளமுள்ள ஒரு பூப்பாத்தியை மறுபடியும் அமைத்தபோது அதன் நீளம் 8 m 50 cm ஆக இருந்தது. அதன் அதிகரித்த நீளம் யாது ?

(6) தூரம் பாய்தல் போட்டி ஒன்றில் பவானி 2 m 15 cm தூரமும் நசீமா 1 m 85 cm தூரமும் பாய்ந்தனர். நசீமாவிலும் பவானி கூடுதலாகப் பாய்ந்துள்ள தூரத்தைக் காண்க.

**3** பெருக்குக.

**உதாரணம்**

| | m | cm |
|---|---|---|
| | 40 | 75 |
| × | | 4 |
| | 163 | 00 |

(1)

| | m | cm |
|---|---|---|
| | 2 | 10 |
| × | | 2 |
| | | |

(2)

| | m | cm |
|---|---|---|
| | 13 | 41 |
| × | | 3 |
| | | |

(3)

| | m | cm |
|---|---|---|
| | 24 | 20 |
| × | | 4 |
| | | |

(4)

| | m | cm |
|---|---|---|
| | 132 | 22 |
| × | | 3 |
| | | |

(5)

| | m | cm |
|---|---|---|
| | 103 | 10 |
| × | | 5 |
| | | |

(6)

| | m | cm |
|---|---|---|
| | 191 | 25 |
| × | | 4 |
| | | |

## 4 பிரசினத்தைத் தீர்க்க.

**உதாரணம்**

ஒரு கூரையை அமைப்பதற்கு 1 m 50 cm நீளமுள்ள 4 மரத் தீராந்திகள் தேவைப்பட்டன. அதற்குத் தேவையான மரத் தீராந்திகளின் மொத்த நீளம் யாது?

| | m | cm |
|---|---|---|
| | 1 | 50 |
| × | | 4 |
| | 6 | 00 |

மரத் தீராந்திகளின் மொத்த நீளம் 6 m ஆகும்.

(1) ஒரு விளையாட்டின்போது தம்பி பாய்ந்த தூரம் 1 m 30 cm ஆகும். அக்கா அத்தூரத்தின் இரண்டு மடங்கைப் பாய்ந்தாள் எனின், அவள் பாய்ந்த தூரம் யாது?

(2) ஒரு கதிரை உறையைத் தைப்பதற்கு 2 m 25 cm நீளமுள்ள துணி தேவையாகும். இவ்வாறான 4 கதிரைகளுக்கு உறையைத் தைப்பதற்குத் தேவையான துணியின் நீளம் யாது?

(3) மின்குமிழ்ச் சரம் ஒன்றின் நீளம் 5 m 50 cm ஆகும். இவ்வாறான 3 மின்குமிழ்ச் சரங்களின் மொத்த நீளம் யாது?

(4) ஒரு முட்கம்பி வேலி சம நீளமுள்ள 5 நிரைகளைக் கொண்டது. ஒரு நிரைக் கம்பியின் நீளம் 250 m 20 cm எனின், வேலியில் உள்ள கம்பியின் மொத்த நீளம் யாது?

## 5 வகுக்க.

**உதாரணம்**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | |
| | | | 4 | 0 | m | | 2 | 1 | cm | |
| | 3 | 1 | 2 | 0 | m | | 6 | 3 | cm | |
| | | 1 | 2 | | | | | | | |
| | | | 0 | 0 | | | | | | |
| | | | | 0 | | | | | | |
| | | | | 0 | | | 6 | | | |
| | | | | | | | 6 | | | |
| | | | | | | | 0 | 3 | | |
| | | | | | | | | 3 | | |
| | | | | | | | | 0 | | |
| | | | | | | | | | | |

விடை 40 m 21 cm

(4) சகோதரி 804 எள்ளுருண்டைகளைச் சமமாக 10 போத்தல்களில் இடுகின்றாள். ஒரு போத்தலில் இடும் எள்ளுருண்டைகளின் எண்ணிக்கை யாது? எத்தனை எள்ளுருண்டைகள் எஞ்சியிருக்கும்?

# 29 உரோம எண்குறிகள்

உரோம எண்குறிகளை இனங்காண்போம்.

i = 1 v = 5 x = 10

| | | | | |
|---|---|---|---|---|
| i<br>1 | ii<br>2 | iii<br>3 | iv<br>4 | v<br>5 |
| vi<br>6 | vii<br>7 | viii<br>8 | ix<br>9 | x<br>10 |
| xi<br>11 | xii<br>12 | xiii<br>13 | xiv<br>14 | xv<br>15 |
| xvi<br>16 | xvii<br>17 | xviii<br>18 | xix<br>19 | xx<br>20 |

1. எண்பெயருக்குப் பொருத்தமான உரோம எண்குறிகளை எழுதுக.

(1) பதினைந்து - ..........
(2) பன்னிரண்டு - ..........
(3) பத்தொன்பது - ..........
(4) பதினொன்று - ..........
(5) இருபது - ..........
(6) ஒன்பது - ..........
(7) பதின்மூன்று - ..........
(8) இரண்டு - ..........
(9) ஐந்து - ..........
(10) பதினாறு - ..........

2. உரோம எண்குறிகளுக்குரிய இந்து - அராபிய எண்குறிகளை எழுதுக.

(1) xiii - ..........
(2) xviii - ..........
(3) xix - ..........
(4) xvii - ..........
(5) xiv - ..........
(6) i - ..........
(7) x - ..........
(8) xvi - ..........
(9) iv - ..........
(10) xi - ..........

3 வெற்றிடங்களை நிரப்புக.

| உரோம எண்குறி | இந்து - அராபிய எண்குறி |
|---|---|
| ....xii.... | 12 |
| xx | ............... |
| ............... | 19 |
| xiv | ............... |
| ............... | 13 |
| xv | ............... |
| ............... | 17 |
| xvi | ............... |
| ............... | 9 |
| xviii | ............... |

4 தரப்பட்டுள்ள உரோம எண்குறிகளுக்கு முன்னரும் பின்னரும் வரும் உரோம எண்குறியை எழுதுக.

| முன்னர் வரும் உரோம எண்குறி | உரோம எண்குறி | பின்னர் வரும் உரோம எண்குறி |
|---|---|---|
| ....xi.... | ....xii.... | ....xiii.... |
| ............. | v | ............. |
| ............. | x | ............. |
| ............. | xiv | ............. |
| ............. | xix | ............. |
| ............. | xviii | ............. |

# 30 நிறைகளை அளத்தல் II

1. விடை எழுதுக.

**உதாரணம்**

| kg | g |
|---|---|
| 6 | 350 |
| × | 5 |
| 31 | 750 |
| 1 | 2 |

(1)

| kg | g |
|---|---|
| 1 | 150 |
| × | 3 |
| | |

(2)

| kg | g |
|---|---|
| 2 | 100 |
| × | 3 |
| | |

(3)

| kg | g |
|---|---|
| 1 | 500 |
| × | 4 |
| | |

(4)

| kg | g |
|---|---|
| 3 | 225 |
| × | 3 |
| | |

(5)

| kg | g |
|---|---|
| 11 | 620 |
| × | 2 |
| | |

(6)

| kg | g |
|---|---|
| 4 | 520 |
| × | 4 |
| | |

(7)

| kg | g |
|---|---|
| 23 | 700 |
| × | 3 |
| | |

(8)

| kg | g |
|---|---|
| 30 | 805 |
| × | 5 |
| | |

(9)

| kg | g |
|---|---|
| 13 | 35 |
| × | 4 |
| | |

2 பிரசினங்களைத் தீர்க்க.

**உதாரணம்**

தேயிலைக் கொழுந்துச் சாக்கு ஒன்றின் நிறை 25 kg 200 g ஆகும். அத்தகைய 3 சாக்குகளின் நிறை யாது?

| | kg | g |
|---|---|---|
| | 25 | 200 |
| × | | 3 |
| | 75 | 600 |

தேயிலைக் கொழுந்துச் சாக்குகள் 3 இன் நிறை 75 kg 600 g ஆகும்.

(1) ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளுக்கு இடியப்பங்களைத் தயாரிப்பதற்கு 1 kg 250 g அரிசி மா தேவை. அவ்வாறான இடியப்பங்களை 3 நாட்களுக்குத் தயாரிப்பதற்குத் தேவையான அரிசி மாவின் நிறை யாது?

(2) ஒன்றின் நிறை 30 kg 500 g ஆகவுள்ள 5 அரிசிச் சாக்குகள் ஒரு லொறியில் ஏற்றப்பட்டன. லொறியில் ஏற்றப்பட்ட அரிசியின் மொத்த நிறை யாது?

(3) கோப்பிச் சாக்கு ஒன்றின் நிறை 15 kg 700 g ஆகும். அத்தகைய 3 சாக்குகளின் நிறை யாது?

(4) ஒரு பெட்டியில் 52 kg 300 g உருளைக் கிழங்கு உள்ளது. அத்தகைய 4 பெட்டிகளின் நிறை யாது?

## 3 பிரசினங்களைத் தீர்க்க.

**உதாரணம்**

```
     6 kg    125 g
  ___________________
2 | 12 kg    250 g
    12
    __
     0       2
             2
             __
             05
              4
              __
              10
              10
              __
               0
```

(1) $2 \overline{)\, 4 \text{ kg} \quad 250 \text{ g}}$

(2) $3 \overline{)\, 6 \text{ kg} \quad 345 \text{ g}}$

(3) $4 \overline{)\, 4 \text{ kg} \quad 40 \text{ g}}$

(4) $5 \overline{)\, 25 \text{ kg} \quad 625 \text{ g}}$

(5) $3 \overline{)\, 36 \text{ kg} \quad 375 \text{ g}}$

(6) $4 \overline{)\, 52 \text{ kg} \quad 204 \text{ g}}$

## 4 பிரசினங்களைத் தீர்க்க.

**உதாரணம்**

8 kg 360 g கேக்கை 4 வகுப்புகளுக்குச் சமமாகப் பகிர்ந்து கொடுக்கும்போது ஒரு வகுப்புக்குக் கிடைக்கும் கேக்கின் அளவு யாது?

```
     2 kg    090 g
  ___________________
4 | 8 kg     360 g
    8
    __
    0        3
             0
             __
             36
             36
             __
              00
               0
              __
               0
```

ஒரு வகுப்புக்குக் கிடைக்கும் கேக்கின் அளவு 2 kg 90 g ஆகும்.

(1) சம நிறை உள்ள 2 விசுக்கோத்துப் பெட்டிகளின் நிறை 6 kg 500 g ஆகும். ஒரு விசுக்கோத்துப் பெட்டியின் நிறை யாது?

(2) தகப்பனின் நிறை மகனின் நிறையின் ஐந்து மடங்காகும். தகப்பனின் நிறை 75 kg 500 g எனின், மகனின் நிறை யாது?

(3) 9 kg 450 g நிறையுள்ள கரட்டு 3 பைகளில் சமமாக இடப்பட்டது. ஒரு பையில் உள்ள கரட்டின் நிறை யாது?

(4) வர்த்தகர் 64 kg 500 g நிறையுள்ள அரிசியைச் சம நிறையுள்ள 4 குவியல்களாகப் பிரித்தார். ஒரு குவியலின் நிறை யாது?

(5) ஒரு களஞ்சியத்தில் இருந்த 80 kg 800 g பருப்பை 4 பேருக்கு சம அளவில் வழங்கினால் ஒருவருக்குக் கிடைக்கும் பருப்பின் நிறை யாது?

# 31 எண் கோலங்கள் II

பின்வரும் எண் கோலத்தைக் கருதுவோம்.

1, 2, 4, 8, ...........

முதலாம் எண் → 1

இரண்டாம் எண் → 2

மூன்றாம் எண் → 4

நான்காம் எண் → 8

- இங்கு முதலாம் எண் 1 ஆகும்.
- முதலாம் எண்ணை இரண்டினால் பெருக்கி இரண்டாம் எண் பெறப்பட்டுள்ளது.

  $1 \times 2 = 2$
- இரண்டாம் எண்ணை இரண்டினால் பெருக்கி மூன்றாம் எண் பெறப்பட்டுள்ளது.

  $2 \times 2 = 4$
- மூன்றாம் எண்ணை இரண்டினால் பெருக்கி நான்காம் எண் பெறப்பட்டுள்ளது.

  $4 \times 2 = 8$
- இதற்கேற்ப நான்காம் எண்ணை இரண்டினால் பெருக்கி ஐந்தாம் எண் பெறப்படுகின்றது.

  $8 \times 2 = 16$
- அதாவது இந்த எண் கோலத்தில் ***முந்திய எண்ணை*** இரண்டினால் பெருக்கிப் ***பிந்திய எண்*** பெறப்பட்டுள்ளது.

1 அத்தகைய சில எண் கோலங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

(1) 3, 6, 12, ..........., .........

(2) 5, 10, 20, ..........., ...........

(3) 7, 14, 28, ..........., ..........

(4) 8, 16, 32, ................., .................

(5) 4, 8, 16, ................., ................., .................

(6) 9, 18, 36, ................., ................., .................

பின்வரும் எண் கோலத்தைக் கருதுவோம்.

4, 12, 36, 108, 324, 972

- இந்த எண் கோலத்தில் **முந்திய எண்ணை** மூன்றினால் பெருக்கிப் **பிந்திய எண்** பெறப்பட்டுள்ளது.

**2 அத்தகைய சில எண் கோலங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.**

(1) 2, 6, 18, ................., .................

(2) 5, 15, 45, ................., .................

(3) 7, 21, 63, ................., .................

(4) 8, 24, 72, ................., .................

(5) 1, 3, 9, ................., ................., .................

பின்வரும் எண் கோலத்தைக் கருதுவோம்.

2, 8, 32, 128, 512, 2048

- இந்த எண் கோலத்தில் **முந்திய எண்ணை** நான்கினால் பெருக்கிப் **பிந்திய எண்** பெறப்பட்டுள்ளது.

3. அத்தகைய சில எண் கோலங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

(1) 4, 16, 64, ................., .................

(2) 3, 12, 48, ................., .................

(3) 6, 24, 96, ................., .................

(4) 7, 28, 112, ................., .................

(5) 5, 20, 80, ................., ................., .................

பின்வரும் எண் கோலத்தைக் கருதுவோம்.

1, 5, 25, 125, 625, 3125

- இந்த எண் கோலத்தில் **முந்திய எண்ணை** ஐந்தினால் பெருக்கிப் **பிந்திய எண்** பெறப்பட்டுள்ளது.

4. அத்தகைய சில எண் கோலங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

(1) 3, 15, 75, ................., .................

(2) 4, 20, 100, ................., .................

(3) 6, 30, 150, ................, .................

(4) 8, 40, 200, ................., .................

(5) 7, 35, 175, ................., .................

(6) 2, 10, 50, ................., ................., .................


# 32 கோணங்கள், திட்டங்கள், அளவிடைப் படங்கள்

## செயற்பாடுகள்

தாளை வட்ட வடிவத்தில் வெட்டிக் கொள்க.


அதனைச் சமமாக இரண்டாக மடித்துக் கொள்க.

அதனை மறுபடியும் இரண்டாக மடித்துக் கொள்க.





இப்போது ஒரு செங்கோண மூலை உள்ள தாள் உங்களுக்குக் கிடைத்துள்ளது.


1. உருவில் உள்ள கோணங்களின் மீது நீர் அமைத்த செங்கோண மூலையை வைத்துப் பார்க்க. வெற்றிடங்களை நிரப்புக.




**2** பின்வரும் கோணங்களின் மீது செங்கோண மூலைகளை வைத்துப் பார்க்க. அவற்றிடையே செங்கோணங்களைத் தெரிந்தெடுத்து உரிய எழுத்தின் கீழ்க் கோடு வரைக.




(*a*)




(*b*)




(*c*)




(*d*)




(*e*)




(*f*)




(*g*)




(*h*)




(*i*)



செங்கோணத்திலும்
சிறிய கோணம்




செங்கோணம்





செங்கோணத்திலும்
பெரிய கோணம்

3. பின்வரும் கோணங்கள் செங்கோணமா, செங்கோணத்திலும் சிறிய கோணமா, செங்கோணத்திலும் பெரிய கோணமா என எழுதுக.




**தளங்கள் உள்ள ஒரு பொருளின் திட்டத்தை அளவிடைக்கு வரைவோம்.**








உமது பயிற்சிப் புத்தகத்தின் ஒரு சதுரத்தின் ஒரு பக்கத்தின் நீளத்தினால் ஒரு சென்ரிமீற்றரை வகைகுறிக்கும்போது

3 cm இற்கு அத்தகைய 3 சதுரங்களின் நீளத்தையும்
5 cm இற்கு அத்தகைய 5 சதுரங்களின் நீளத்தையும்
எடுக்கலாம். இப்போது மேற்குறித்த திட்டத்தை அளவிடைக்கு வரைவோம்.



4 பின்வரும் திண்மப் பொருள்கள் ஒவ்வொன்றினதும் திட்டத்தை அளவிடைக்கு வரைக.



# 33 தரவுகளைக் கையாளுதல் II

1 கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் நகரங்களிடைப் புகையிரதங்கள் மூன்றின் பயணங்கள் பற்றிய நேரசூசி கீழே தரப்பட்டுள்ளது.

| புகையிரதத்தின் பெயர் | பயணம் ஆரம்பிக்கும் நேரம் | பயணம் முடிவடையும் நிலையம் | பயணம் முடிவடையும் நேரம் |
|---|---|---|---|
| ருகுனு குமாரி | 16:00 | மாத்தறை | 19:30 |
| யாழ்தேவி | 05:45 | யாழ்ப்பாணம் | 14:45 |
| உடரட்ட மெனிக்கே | 09:45 | பதுளை | 19:05 |

(1) *யாழ்தேவி பயணத்தை ஆரம்பிக்கும் நேரம் யாது?*

(2) *யாழ்தேவியின் பயணம் முடிவடையும் நிலையம் யாது?*

(3) *மாத்தறைப் புகையிரத நிலையத்தில் பயணம் முடிவடையும் புகையிரதத்தின் பெயர் யாது?*

(4) *உடரட்ட மெனிக்கே பயணத்தை ஆரம்பிக்கும் நேரம் யாது?*

(5) *பதுளைக்குச் செல்வதற்குப் பயணிக்க வேண்டிய புகையிரதத்தின் பெயர் யாது?*

2 பாரதி வித்தியாலயத்தின் விளையாட்டு விழாவின் நிகழ்ச்சிநிரல் கீழே தரப்பட்டுள்ளது.

| நேரம் | அம்சம் |
|---|---|
| மு.ப. 9.00 | விழா ஆரம்பம் |
| மு.ப. 9.30 | போட்டியை நடத்தல் |
| மு.ப. 10.15 | உடற்பயிற்சிக் காட்சி |
| மு.ப. 10.30 | அணிவகுப்பு |
| மு.ப. 10.45 | பிரதம விருந்தினர் உரை |
| மு.ப. 11.15 | பரிசளிப்பும் சான்றிதழ்களை வழங்கலும் |
| மு.ப. 11.45 | விழாவின் முடிவு |

**விடை எழுதுக.**

(1) விளையாட்டு விழாவின் தொடக்க நேரம் யாது?

(2) விளையாட்டு விழாவில் மு.ப. 10.30 இற்கு இடம்பெறும் அம்சம் யாது?

(3) உடற்பயிற்சிக் காட்சி எத்தனை மணிக்கு நடைபெறும்?

(4) பிரதம விருந்தினர் உரை எத்தனை மணிக்கு இடம்பெறும்?

(5) விளையாட்டு விழா எத்தனை மணித்தியாலங்கள் நடைபெறும்?

3 "வள்ளுவர்" நூலகத்தில் இருக்கும் நூல்கள் பற்றிய தகவல்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| சிறுவர் நூல்கள் | தமிழ் நூல்கள் | சஞ்சிகைகள் | வரலாற்று நூல்கள் | சமய நூல்கள் | நவீனங்கள் | வரலாற்று நூல்கள் |
|---|---|---|---|---|---|---|
| 400 | 220 | 200 | 500 | 420 | 700 | 250 |

(1) கூடுதலான எண்ணிக்கையில் .......................... நூல்கள் உள்ளன.

(2) வள்ளுவர் நூலகத்தில் 400 .......................... நூல்கள் உள்ளன.

(3) சஞ்சிகைகளிலும் பார்க்க ............................ தமிழ் நூல்கள் கூடுதலாக உள்ளன.

(4) சிறுவர் நூல்களினதும் ............................ நூல்களினதும் மொத்தம் 650 ஆகும்.

(5) ............................ நூல்களினதும் சமய நூல்களினதும் மொத்தம் 920 ஆகும்.

(6) சமய நூல்களினதும் தமிழ் நூல்களினதும் மொத்த எண்ணிக்கை ............................ ஆகும்.

4 2018 ஆம் ஆண்டில் $A$, $B$ என்னும் இரு பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவில் இருந்த மாணவர்கள் பற்றிய தகவல்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அதனைக் கொண்டு விடை எழுதுக.

| | தரம் 1 | தரம் 2 | தரம் 3 | தரம் 4 | தரம் 5 |
|---|---|---|---|---|---|
| பாடசாலை $A$ | 160 | 180 | 210 | 225 | 250 |
| பாடசாலை $B$ | 160 | 165 | 190 | 210 | 230 |

(1) பாடசாலை $A$ இல் எத்தரத்தில் கூடுதலான பிள்ளைகள் உள்ளனர்?

(2) $A$, $B$ ஆகிய இரு பாடசாலைகளிலும் எத்தரத்தில் மாணவர்கள் சம எண்ணிக்கையில் உள்ளனர்?

(3) பாடசாலை $A$ இன் தரம் 5 இல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை பாடசாலை $B$ இன் தரம் 5 இல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க எவ்வளவினால் கூடியது?

(4) பாடசாலை $B$ இன் 2, 3, 4 ஆகிய தரங்களில் உள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

**சில நகரங்களுக்கிடையே உள்ள தூரங்கள் பின்வரும் அட்டவணையிலே km இல் தரப்பட்டுள்ளன.**

| | | | | திருகோணமலை |
|---|---|---|---|---|
| | | | பண்டாரவளை | 183 |
| | | பதுளை | 32 | 167 |
| | அனுராதபுரம் | 272 | 163 | 196 |
| அம்பேபுஸ்ஸ | 154 | 177 | 168 | 243 |

இவ்வட்டவணையில் பெற்ற சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- பதுளையிலிருந்து பண்டாரவளைக்கு உள்ள தூரம் 32 km ஆகும்.
- பதுளையிலிருந்து திருகோணமலைக்கு உள்ள தூரம் 167 km ஆகும்.
- பண்டாரவளையிலிருந்து திருகோணமலைக்கு உள்ள தூரம் 183 km ஆகும்.
- பதுளையிலிருந்து பண்டாரவளையினூடாகத் திருகோணமலைக்கு உள்ள தூரம் (32 km + 183 km =) 215 km ஆகும்.

5 மேற்குறித்த அட்டவணையைக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(1) அம்பேபுஸ்ஸவிலிருந்து அனுராதபுரத்திற்கு உள்ள தூரம் யாது?

(2) அனுராதபுரத்திலிருந்து பண்டாரவளைக்கு உள்ள தூரம் யாது?

(3) எவ்விரு நகரங்களுக்கிடையே உள்ள தூரம் கூடியதாகும்?

(4) எவ்விரு நகரங்களுக்கிடையே உள்ள தூரம் குறைந்ததாகும்?

(5) எவ்விரு நகரங்களுக்கிடையே உள்ள தூரம் 177 km ஆகும்?

(6) அனுராதபுரத்திலிருந்து பதுளையூடாகப் பண்டாரவளைக்கு உள்ள தூரம் யாது?

# 34 பிரசினங்களைத் தீர்த்தல் II

1 தீர்க்க.

**உதாரணம்**

ஒரு பூப்பாத்தியில் இடுவதற்காக 2 kg 750 g நிறை வீதம் உள்ள 5 உரப்பைகள் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. விநியோகித்த உரத்தின் மொத்த நிறையைக் காண்க.

| | kg | g |
|---|---|---|
| | 2 | 750 |
| × | | 5 |
| | 13 | 750 |

உரத்தின் மொத்த நிறை 13 kg 750 g ஆகும்.

(1) ஒரு நிரையில் 8 தென்னங் கன்றுகள் வீதம் 50 நிரைகளில் நடுவதற்கு எத்தனை தென்னங் கன்றுகள் தேவை ?

(2) நகர் $A$ இற்கும் நகர் $B$ இற்குமிடையே உள்ள தூரம் 15 km ஆகும். நகர் $C$ இற்கும் நகர் $D$ இற்குமிடையே உள்ள தூரம் அத்தூரத்தின் ஏழு மடங்காகும். நகர் $C$ இற்கும் நகர் $D$ இற்குமிடையே உள்ள தூரம் எத்தனை கிலோமீற்றர் ஆகும் ?

(3) ஒரு பெட்டியில் 120 மின் குமிழ்கள் உள்ளன. அத்தகைய 6 பெட்டிகளில் உள்ள மின் குமிழ்களின் மொத்த எண்ணிக்கை யாது ?

(4) ஓர் ஊழியரின் ஒரு நாட் சம்பளம் 975 ரூபாய் ஆகும். அவர் 5 நாட்களில் உழைக்கும் மொத்தச் சம்பளத்தைக் காண்க.

(5) ஒரு பிள்ளை ஒரு நாளில் குடிக்க வேண்டிய நீரின் அளவு 1 $l$ 500 ml ஆகும். அதற்கேற்ப அப்பிள்ளை மூன்று நாட்களில் குடிக்க வேண்டிய நீரின் அளவைக் காண்க.

2 தீர்க்க.

**உதாரணம்**

ஒரு பெரிய போத்தலில் 20 $l$ நீர் உள்ளது. அந்நீர் 4 சிறிய போத்தல்களில் சம அளவுகளில் இடப்படுகின்றது. ஒரு சிறிய போத்தலில் அடங்கும் நீரின் அளவு யாது?

$$\begin{array}{r|l} & 5\ l \\ \hline 4 & 20\ l \\ & \underline{20} \\ & \ \ 0 \end{array}$$

ஒரு சிறிய போத்தலில் அடங்கும் நீரின் அளவு 5 $l$ ஆகும்.

(1) ஒரு சுற்றுலாவில் பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கை 432 ஆகும். ஒவ்வொரு பேருந்திலும் சம எண்ணிக்கைகளில் பயணிக்கத்தக்கதாக அவர்களுக்காக 8 பேருந்துகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. ஒரு பேருந்தில் பயணிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

(2) சம அளவுள்ள ஐந்து அறைகளின் நிலத்தில் பதிப்பதற்கு 350 பீங்கான் ஓடுகள் தேவை. ஓர் அறைக்குத் தேவையான பீங்கான் ஓடுகளின் எண்ணிக்கை யாது?

(3) ஒரு விளையாட்டு வீரர் 800 m தூர ஓட்டப்போட்டியில் இரு சுற்றுகளைப் பூர்த்தி செய்கின்றார். அவர் ஒரு சுற்றில் ஓடும் தூரத்தைக் காண்க.

(4) 27 kg 450 g பருப்பு 9 பைக்கற்றுகளில் சம நிறையில் பொதிசெய்யப்பட்டது. ஒரு பைக்கற்றில் உள்ள பருப்பின் நிறை யாது?

3 **தீர்க்க.**

**உதாரணம்**

ஒரு நிரையில் 28 கதிரைகள் வீதம் ஒரு மண்டபத்தில் 9 நிரைகள் உள்ளன. அக்கதிரைகள் 7 சம நிரைகளாக மறுபடியும் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. மறுபடியும் ஒழுங்குபடுத்திய பின்னர் ஒரு நிரையில் எத்தனை கதிரைகள் இருக்கும்?

$$\begin{array}{r} 28 \\ \times \quad 9 \\ \hline 252 \\ \hline \end{array}$$

கதிரைகளின் மொத்த எண்ணிக்கை = 252

$$\begin{array}{r} 36 \\ 7 \,\overline{)\,252} \\ \underline{21}\phantom{0} \\ 42 \\ \underline{42} \\ 0 \end{array}$$

மறுபடியும் ஒழுங்குபடுத்திய பின்னர் ஒரு நிரையில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை 36 ஆகும்


(1) ஒரு பெட்டியில் 50 யோகட் கோப்பைகள் உள்ளன. அத்தகைய 9 பெட்டிகளில் இருக்கும் யோகட் கோப்பைகள் கொண்டு செல்லப்படும் வசதிக்காக மறுபடியும் 3 பெட்டிகளில் சமமாக இடப்பட்டன. இப்போது ஒரு பெட்டியில் உள்ள யோகட் கோப்பைகளின் எண்ணிக்கை யாது ?

(2) ஒரு பேருந்தில் 48 மாணவர்கள் உள்ளனர். அத்தகைய 5 பேருந்து களில் உள்ள மாணவர்கள் 4 குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒரு குழுவில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

(3) ஒரு பையில் 45 இலந்தைப் பழங்கள் உள்ளன. அத்தகைய 8 பைகளில் உள்ள இலந்தைப் பழங்கள் 6 நண்பர்களிடையே சமமாகப் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன. ஒரு நண்பனுக்குக் கிடைக்கும் இலந்தைப் பழங்களின் எண்ணிக்கை யாது?

# 35 மீட்டல் III

**1** சில நண்பர்களின் வீடுகள் அமைந்துள்ள விதம் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.




(1) *சங்கரின் வீடு கண்ணனின் வீட்டிற்கு எத்திசையில் உள்ளது?*

(2) *முரளியின் வீடும் சங்கரின் வீடும் ரவியின் வீட்டிற்கு எத்திசையில் உள்ளன?*

(3) *ரவியின் வீடு நியாசின் வீட்டிற்கு எத்திசையில் உள்ளது?*

(4) *சங்கரின் வீட்டிற்கு வடமேற்கே எவருடைய வீடு உள்ளது?*

(5) *முரளியின் வீடு கண்ணனின் வீட்டிற்கு எத்திசையில் உள்ளது?*

**2** பெருக்கத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து இணைக்க.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | 4 × 8 | 54 | (6) | 8 × 8 | 81 |
| (2) | 6 × 9 | 27 | (7) | 5 × 8 | 90 |
| (3) | 9 × 8 | 32 | (8) | 9 × 9 | 64 |
| (4) | 3 × 9 | 18 | (9) | 7 × 8 | 56 |
| (5) | 2 × 9 | 72 | (10) | 10 × 9 | 40 |

**3** பெருக்குக.

(1) $74 \times 8 = ___$

(2) $62 \times 9 = ___$

(3) $205 \times 8 = ___$

(4) $197 \times 9 = ___$

(5) $379 \times 8 = ___$

(6) $106 \times 9 = ___$

**4** பிரசினங்களைத் தீர்க்க.

(1) ஒரு பெட்டியில் 245 மாம்பழங்கள் உள்ளன. அத்தகைய 8 பெட்டிகளில் எத்தனை மாம்பழங்கள் உள்ளன?

(2) ஒரு பிள்ளைக்கு 9 வளையல்கள் வீதம் 309 பிள்ளைகளுக்குக் கொடுப்பதற்குத் தேவையான வளையல்களின் எண்ணிக்கை யாது?

(3) ஒரு பைக்கற்றில் 10 பால் ரொபிகள் உள்ளன. அத்தகைய 85 பைக்கற்றுகளில் இருக்கும் பால் ரொபிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

**5** வெற்றுக் கூடுகளுக்குப் பொருத்தமான இலக்கத்தை எழுதுக.

(1) $8\square \times 8 = 648$

(2) $1\square 5 \times 9 = 945$

(3) $3\square 1 \times 8 = 2408$

(4) $\square 9 \times 9 = 801$

**6** சுருக்குக.

(1)

| | *l* | ml |
|---|---|---|
| | 1 | 134 |
| × | | 2 |
| | | |

(2)

| | *l* | ml |
|---|---|---|
| | 3 | 115 |
| × | | 3 |
| | | |

(3)

| | *l* | ml |
|---|---|---|
| | 6 | 125 |
| × | | 4 |
| | | |

(4)

| | *l* | ml |
|---|---|---|
| | 16 | 321 |
| × | | 5 |
| | | |

(5) $2\overline{)\,6\ l\ \ 462\ \text{ml}}$

(6) $2\overline{)\,4\ l\ \ 604\ \text{ml}}$

(7) $3\overline{)\,9\ l\ \ 120\ \text{ml}}$

(8) $3\overline{)\,12\ l\ \ 921\ \text{ml}}$

**7** 900 ml **கொள்ளக்கூடிய ஒரு கூஜாவில் திரவத்தை நிரப்பி நான்கு தடவைகள் திரவத்தை ஊற்றும்போது ஒரு போத்தல் முற்றாக நிரம்பும்.**

(1) *அப்போத்தலில் திரவம் முற்றாக நிரம்பியுள்ளதெனின் அதன் அளவு யாது ?*

(2) *அப்போத்தலில் திரவத்தை முற்றாக நிரப்பி அதில் உள்ள திரவம் 3 ஒத்த சிறிய போத்தல்களில் முற்றாக நிரப்பப்படுகின்றது. ஒரு சிறிய போத்தலில் திரவம் முற்றாக நிரம்பி இருக்கும்போது அதில் உள்ள திரவத்தின் அளவு யாது ?*

**8**







20 *l* 640 ml



(1) பாத்திரம் *B* இல் நீர் முற்றாக நிரம்புவதற்குப் பாத்திரம் *A* இல் நீரை முற்றாக நிரப்பி ஐந்து தடவைகள் இடவேண்டும். பாத்திரம் *A* இல் முற்றாக நீர் நிரம்பும்போது அதில் உள்ள நீரின் அளவு யாது?

(2) பாத்திரம் *C* இல் நீரை முற்றாக நிரப்பி இரு தடவை இடும்போது பாத்திரம் *B* இல் முற்றாக நீர் நிரம்பும். பாத்திரம் *C* இல் முற்றாக நீர் நிரம்பும்போது அதில் உள்ள நீரின் அளவு யாது?

**9 நெடும் வகுத்தல் முறையில் விடையைப் பெறுக.**

(1) 132 ÷ 8 (2) 160 ÷ 8 (3) 609 ÷ 8

(4) 630 ÷ 9 (5) 702 ÷ 9 (6) 919 ÷ 9

**10 நெடும் வகுத்தல் முறையில் பிரசினங்களைத் தீர்க்க.**

(1) ஓர் ஆசிரியை 562 வளையல்களை ஒரு பிள்ளைக்கு 8 வீதம் ஒரு நடனக்குழுவில் உள்ள பிள்ளைகளுக்குக் கொடுத்தார். அக்குழுவில் எத்தனை பிள்ளைகள் உள்ளனர்? பகிர்ந்த பின்னர் எத்தனை வளையல்கள் எஞ்சியிருக்கும்?

(2) ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட ஒன்பது நிறங்களில் 819 பந்துகள் உள்ளன. ஒவ்வொரு நிறத்திலும் சம எண்ணிக்கையில் பந்துகள் உள்ளன. ஒரு நிறத்தில் உள்ள பந்துகளின் எண்ணிக்கை யாது?

**11 விடையைப் பெறுக.**

(1) 60 ÷ 10 (2) 85 ÷ 10

(3) 650 ÷ 10 (4) 863 ÷ 10

**12 பிரசினங்களைத் தீர்க்க.**

(1) ஒரு நிரையில் பதிப்பதற்கு 10 தரை ஓடுகள் தேவை. 960 தரை ஓடுகளை எத்தனை நிரைகளில் பதிக்கலாம்?

(2) ஒரு பாடசாலையைத் துப்புரவாக்கும் சிரமதானத்திற்காக 10 பெற்றோர்கள் வீதம் குழுக்களாக்கப்பட்டனர். வந்திருந்த பெற்றோர்களின் எண்ணிக்கை 864 ஆகும். அவர்களைக் கொண்டு எத்தனை குழுக்களை அமைக்கலாம்? எஞ்சியிருப்பவர்களிலிருந்து மேலும் ஒரு குழுவை அமைப்பதற்கு எத்தனை பேர் இருத்தல் வேண்டும்?

**13** **விடை எழுதுக.**

(1)

| | kg | g |
|---|---|---|
| | 14 | 125 |
| + | 32 | 911 |
| | | |

(2)

| | kg | g |
|---|---|---|
| | 34 | 63 |
| + | 26 | 86 |
| | | |

(3)

| | kg | g |
|---|---|---|
| | 44 | 57 |
| − | 21 | 63 |
| | | |

(4)

| | kg | g |
|---|---|---|
| | 82 | 65 |
| − | 61 | 74 |
| | | |

(5)

| | kg | g |
|---|---|---|
| | 22 | 420 |
| × | | 3 |
| | | |

(6)

| | kg | g |
|---|---|---|
| | 32 | 120 |
| × | | 5 |
| | | |

(7) 5 ⟌ 20 kg 325 g

(8) 4 ⟌ 32 kg 160 g

**14** வர்த்தகர் ஒருவர் 15 kg 120 g வீதம் நிறையுள்ள 4 பருப்புச் சாக்குகளை வாங்கினார்.

(1) அவர் வாங்கிய பருப்பின் மொத்த நிறை யாது?

(2) அவர் வாங்கிய அப்பருப்பினை நிறையிற் சமமான 3 பைகளில் இடப்பட்டது. ஒரு பையில் உள்ள பருப்பின் அளவு யாது?

15 அட்டவணையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

| இந்து - அராபிய எண்குறி | உரோம எண்குறி |
|---|---|
| 11 | ....... |
| 8 | ....... |
| ....... | xiii |
| ....... | xvii |
| 10 | ....... |
| 12 | ....... |

16 கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களை நிரப்புக.

(1) 4, 12, 36, 108, ......., ......., .......

(2) 1, 4, 16, 64, ......., ......., ........


(3) 6, 12, 24, 48, ......., ......., .......

(4) 1, 5, 25, 125, ......., ......., .......

(5) 7, 21, 63, 189, ......., ......., .......

(6) 2, 10, 50, 250, ......., ......., .......

17 கீழே தரப்பட்டுள்ள கோணங்கள் ஒவ்வொன்றும் செங்கோணமா, செங்கோணத்திலும் சிறிய கோணமா, செங்கோணத்திலும் பெரிய கோணமா என எழுதுக.



18 5 மாணவர்கள் பாடசாலைக்கு வரும் விதம் தொடர்பான தகவல்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| பெயர் | வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் | பாடசாலைக்கு வரும் விதம் | பாடசாலைக்கு வர எடுக்கும் நேரம் |
|---|---|---|---|
| சுமுது | 1 km 200 m | முச்சக்கர வண்டியில் | 10 நிமிடம் |
| கவிதா | 500 m | நடந்து | 15 நிமிடம் |
| சுதன் | 15 km | புகையிரதத்தில் | 40 நிமிடம் |
| மீனா | 1 km | நடந்து | 35 நிமிடம் |
| பாத்திமா | 2 km | பேருந்தில் | 20 நிமிடம் |

அட்டவணையைக் கொண்டு விடை எழுதுக.

(1) பாடசாலைக்கு நடந்து வரும் பிள்ளைகள் யாவர்?

(2) புகையிரதத்தில் பாடசாலைக்கு வரும் பிள்ளை யார்?

(3) சுமுதுவின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் எவ்வளவு?

(4) பாத்திமா பாடசாலைக்கு எவ்வாறு வருகின்றார்?

(5) 30 நிமிடத்திற்குக் குறைவான காலத்தில் பாடசாலைக்கு வரும் பிள்ளைகள் யாவர்?

19 விடை எழுதுக.

(1) ஆறு பிள்ளைகள் வீதம் இருக்கும் 18 குழுக்கள் உள்ளன. அதே பிள்ளைகளை நால்வர் கொண்ட குழுக்களாக்கினால் கிடைக்கும் குழுக்களின் எண்ணிக்கை யாது?

(2) 210 தேங்காய்கள் 7 சாக்குகளில் சமனாக இடப்பட்டுள்ளன. பின்னர் 4 சாக்குகள் விற்கப்பட்டன. விற்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

# 36 மீட்டல் IV (ஆண்டிறுதி)

1. அட்டவணையைப் பிரதிசெய்து வெற்றிடங்களை நிரப்புக.

| எண் | இலக்கம் | இலக்கம் இருக்கும் இடம் | இடப் பெறுமானம் | இலக்கத்தினால் வகை குறிக்கப்படும் பெறுமானம் |
|---|---|---|---|---|
| 3352 | ........... | பத்தினிடம் | 10 | .................... |
| 13 452 | 3 | .............................. | ............ | .................... |
| 81 563 | ........... | .............................. | 1 | .................... |
| 39 450 | ........... | .............................. | .............. | 400 |
| 10 894 | 0 | .............................. | .............. | .................... |
| 25 760 | 2 | .............................. | .............. | .................... |
| 80 607 | 6 | .............................. | .............. | .................. |
| 75 000 | ........... | ஒன்றினிடம் | .............. | .................... |

2. வெற்றிடங்களை நிரப்புக.

(i) 50 000 + 6000 + 200 + 40 + 8 = ....................

(ii) 30 000 + 0 + 100 + 20 + 0 = ....................

(iii) 60 000 + 4000 + 0 + 10 + 5 = ....................

(iv) 90 000 + 0 + 700 + 0 + 3 = ....................

3. விரித்து எழுதுக.

(i) 3055 (ii) 24 382 (iii) 4230 (iv) 20 003


**4** **தரப்பட்டுள்ள எண் தொகுதிகளை ஏறுவரிசையில் எழுதுக.**

(i) 18 314, 12 524, 11 431

(ii) 32 120, 42 021, 22 210

(iii) 94 375, 94 275, 94 735

**5** **தரப்பட்டுள்ள எல்லா எண்களையும் பயன்படுத்தி**




(i) அமைக்கத்தக்க மிகப் பெரிய எண்ணை எழுதுக.

(ii) அமைக்கத்தக்க மிகச் சிறிய எண்ணை எழுதுக.

(iii) 25 000 இற்கும் 50 000 இற்கும் இடையே இருக்கும் மூன்று எண்களை எழுதி அம்மூன்று எண்களையும் ஏறுவரிசையில் எழுதுக.

(iv) 45 000 இற்கும் 50 000 இற்கும் இடையே இருக்கும் மூன்று எண்களை எழுதி அம்மூன்று எண்களையும் இறங்குவரிசையில் எழுதுக.

**6** **கீழே கோடிடப்பட்ட எண்ணின் எண்பெயரை எழுதுக.**

(i) வீட்டின் சுவரைக் கட்டுவதற்குத் தந்தையார் 32 250 செங்கற்களைக் கொண்டு வந்தார்.

(ii) சுதந்திர தினவிழாவைப் பார்ப்பதற்கு 10 000 இற்கு மேற்பட்ட மக்கள் வந்தனர்.

(iii) அகில இலங்கைப் பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்கு 11 600 பாடசாலை மாணவர்கள் போகம்பர விளையாட்டு மைதானத்திற்கு வந்தனர்.

(iv) ஒரு குறித்த நகரின் சனத்தொகை 18 050 ஆகும்.

## 7. விடை எழுதுக.

(1)

| | | | | |
|---|---|---|---|---|
| | 5 | 7 | 6 | 7 |
| + | 1 | 3 | 2 | 0 |
| | | | | |

(2)

| | | | | |
|---|---|---|---|---|
| | 1 | 3 | 8 | 8 |
| + | 4 | 7 | 3 | 4 |
| | | | | |

(3)

| | | | | |
|---|---|---|---|---|
| | 2 | 3 | 5 | 2 |
| | 1 | 7 | 2 | 0 |
| + | 3 | 1 | 0 | 8 |
| | | | | |

(4)

| | | | | |
|---|---|---|---|---|
| | 3 | 2 | 7 | 7 |
| | 1 | 8 | 3 | 2 |
| + | 1 | 0 | 1 | 6 |
| | | | | |

(5)

| | | | | |
|---|---|---|---|---|
| | 8 | 2 | 7 | 9 |
| − | 3 | 4 | 2 | 3 |
| | | | | |

(6)

| | | | | |
|---|---|---|---|---|
| | 6 | 3 | 2 | 0 |
| − | 3 | 7 | 1 | 9 |
| | | | | |

## 8. எண்கள் எழுதப்பட்டுள்ள 5 அட்டைகள் கீழே தரப்பட்டுள்ளன.

*A* 2130

*B* 2700

*C* 3080

*D* 3425

*E* 873

(i) *D*, *E* ஆகிய இரண்டு அட்டைகளிலும் குறிக்கப்பட்டுள்ள எண்களின் மொத்தத்தைக் காண்க.

(ii) *A*, *C*, *E* ஆகிய மூன்று அட்டைகளிலும் குறிக்கப்பட்டுள்ள எண்களின் மொத்தத்தைக் காண்க.

(iii) அட்டை $C$ இற் குறிக்கப்பட்டுள்ள எண்ணிற்கும் அட்டை $B$ இற் குறிக்கப்பட்டுள்ள எண்ணிற்குமிடையே உள்ள வித்தியாசத்தைக் காண்க.

(iv) அட்டை $C$ இற் குறிக்கப்பட்டுள்ள எண் அட்டை $E$ இற் குறிக்கப் பட்டுள்ள எண்ணிலும் பார்க்க எவ்வளவினால் கூடியது?

**9** **கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

(i) 32, 34, 36, 38, ............, ............, ............

(ii) 210, 215, 220, 225, ............, ............, ............

(iii) 5, 10, 20, 40, ............, ............, ............

(iv) 341, 345, 349, 353, ............, ............, ............

(v) 3, 9, 27, 81, ............, ............, ............

(vi) 406, 412, 418, 424, ............, ............, ............

(vii) 102, 111, 120, 129, ........, ........, ........


(viii) 62, 70, 78, 86, ......., ........, ........

(ix) 1, 4, 16, 64, ......., ........,

(x) 47, 54, 61, 68, ........, ........, ........


10. ஒவ்வொரு உருவிலும் நிழற்றப்பட்டுள்ள பகுதி மொத்த உருவின் என்ன பின்னமெனப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i)




..................................

(ii)




..................................

(iii)




..................................

(iv)



..................................

(v)



..................................

11. 24 அன்னாசிப் பழங்களின்

(i) $\frac{1}{4}$ இல் எத்தனை அன்னாசிப் பழங்கள் உள்ளன?

(ii) $\frac{2}{4}$ இல் எத்தனை அன்னாசிப் பழங்கள் உள்ளன?

(iii) $\frac{3}{4}$ இல் எத்தனை அன்னாசிப் பழங்கள் உள்ளன?

**12** **விடை எழுதுக.**

(1) $282 \times 3$

(2) $402 \times 7$

(3) $324 \times 4$

(4) $741 \times 6$

(5) $325 \times 8$

(6) $731 \times 9$

**13** **விடை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| (1) $234 \div 6$ | (2) $315 \div 7$ | (3) $820 \div 6$ | (4) $771 \div 4$ |
| (5) $402 \div 3$ | (6) $952 \div 8$ | (7) $828 \div 10$ | (8) $923 \div 9$ |

**14** **பிரசினங்களைத் தீர்க்க.**

(1) ஒரு பெட்டியில் 6 சவர்காரக் கட்டிகள் உள்ளன. அத்தகைய 512 பெட்டிகளில் உள்ள சவர்க்காரக் கட்டிகளின் எண்ணிக்கை யாது? அவை 3 சவர்க்காரக் கட்டிகள் வீதம் பொதிசெய்யப்பட்டன. மொத்தப் பொதிகளின் எண்ணிக்கை யாது?

(2) ஒரு வர்த்தகர் ஒரு கொத்தில் 7 அந்தூரியம் மலர்கள் வீதம் 308 கொத்துகளை வாங்கினார். அவர் வாங்கிய அந்தூரியம் மலர்களின் எண்ணிக்கை யாது? அவர் அவற்றை 4 மலர்கள் வீதம் கொத்துகளாக்கினார். அவர் செய்த மலர்க் கொத்துகளின் எண்ணிக்கை யாது?

(3) ஒரு மொத்த விற்பனையாளரிடம் 8 தேங்காய்கள் வீதம் 312 குவியல்கள் உள்ளன. அவரிடம் உள்ள தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை யாது? அவர் அத்தேங்காய்களின் மொத்த எண்ணிக்கையைக் கொண்டு ஒரு குவியலில் 6 தேங்காய்கள் வீதம் எத்தனை குவியல்களை ஆக்கலாம்?

(4) 9 பயிற்சிப் புத்தகங்கள் வீதம் 126 மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான பயிற்சிப் புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை யாது? அவற்றை ஒரு மாணவனுக்கு 7 வீதம் எத்தனை மாணவர்களுக்கு வழங்கலாம்?

**15** **விடை எழுதுக.**

(1) மு.ப. 6.55 இற்குப் பாடசாலைக்கு வந்த ராதா பாடசாலையிலிருந்து பி.ப. 2.20 இற்கு வீட்டை நோக்கிப் புறப்பட்டாள்.


(i) அவள் பாடசாலையிலிருந்து புறப்பட்ட நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்தில் எழுதுக.

(ii) ராதா பாடசாலையில் செலவிட்ட நேரம் யாது?

(2) சங்கரி நண்பிகளுடன் 40 நிமிடத்திற்கு விளையாடி பி.ப. 5.30 இற்கு விளையாட்டை முடித்தாள். அவள் விளையாட ஆரம்பித்த நேரம் யாது?

(3) மு.ப. 10.20 இற்குப் புறப்பட்ட ஒரு பேருந்து 4 மணித்தியாலம் 45 நிமிடத்திற்குப் பின்னர் சேரிடத்தை அடைந்தது. பேருந்து சேரிடத்தை அடைந்த நேரம் யாது?

**16** **தரப்பட்டுள்ள படத்தைக் கொண்டு விடை எழுதுக.**



(i) நகர் $A$ இலிருந்து நகர் $B$ இனூடாக நகர் $C$ இற்குச் செல்லும் ஒருவர் செல்ல வேண்டிய தூரம் யாது?

(ii) நகர் $A$ இற்கும் நகர் $B$ இற்குமிடையே உள்ள தூரத்திற்கும் நகர் $B$ இற்கும் நகர் $C$ இற்குமிடையே உள்ள தூரத்திற்கும் இடையே உள்ள வித்தியாசம் யாது?

(iii) நகர் $A$ இற்கும் நகர் $E$ இற்குமிடையே உள்ள தூரத்தின் 3 மடங்கான தூரம் எந்நகர்களுக்கு இடையே உள்ளது?

(iv) நகர் $E$ இற்கும் நகர் $D$ இற்குமிடையே உள்ள தூரத்திலும் பார்க்க நகர் $D$ இற்கும் நகர் $C$ இற்குமிடையே உள்ள தூரம் எவ்வளவினால் கூடியது?

(v) நகர் $A$ இலிருந்து நகர் $C$ இற்குச் செல்வதற்கான குறுகிய தூரம் யாது?

17 **தீர்க்க.**

(1) கீதா பாடசாலைக்குச் செல்வதற்காக வீட்டிலிருந்து 1 km 170 m தூரம் சைக்கிளிலும் 20 km 550 m தூரம் பாடசாலைப் பேருந்திலும் பயணித்துப் பாடசாலைக்கு வருகின்றாள். கீதாவின் வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் யாது?

(2) 110 m 75 cm நீளமுள்ள ஒரு மண்டபத்தில் 50 m 25 cm நீளமுள்ள இடம் கதிரைகளை வைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மண்டபத்தில் கதிரைகளை வைப்பதற்கு ஒதுக்கப்படாத பகுதியின் நீளம் யாது?

(3) ஒரு மேசையில் விரிப்பதற்குத் தேவையான மேசைத் துணியின் நீளம் 3 m 30 cm ஆகும். அவ்வாறான ஐந்து மேசைகளில் விரிப்பதற்குத் தேவையான மேசைத் துணியின் நீளம் யாது?

(4) 40 m 80 cm நீளமுள்ள ஒரு கம்பிச் சுருள் சம நீளமுள்ள 8 துண்டுகளாக வெட்டப்பட்டுள்ளது. ஒரு துண்டின் நீளம் யாது?

(5) ஒரு சைக்கிளோட்டப் போட்டியில் ஒரு போட்டியாளர் பூர்த்தி செய்ய வேண்டிய மொத்தத் தூரம் 40 km 800 m ஆகும். அப்போட்டியில் சங்கர் 15 km 410 m தூரம் சென்றுள்ளார். அவர் போட்டியை முடிப்பதற்கு மேலும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும்?

**18** **விடை எழுதுக.**

(1) சங்கரிடம் 75 ரூபாய் 25 சதமும் சேகரிடம் 170 ரூபாய் 50 சதமும் உள்ளன. இருவரிடமும் உள்ள மொத்தப் பணம் யாது?

(2) கமலினியிடம் 325 ரூபாய் 25 சதம் உள்ளது. அவள் அதில் 182 ரூபாய் 75 சதத்தைச் செலவழித்தாள். இப்போது அவளிடம் எவ்வளவு பணம் மீதியாக உள்ளது?

**19** **ஆடை விற்பனைக் கடை ஒன்றில் விற்பனைக்கு இருந்த ஆடைகளின் விலைகள் கீழே தரப்பட்டுள்ளன.**

| ஆடை வகை | விலை | |
|---|---|---|
| | ரூபாய் | சதம் |
| குழந்தை பெனியன் | 260 | 00 |
| குறுங் காற்சட்டை | 420 | 00 |
| நீளக் காற்சட்டை | 740 | 00 |
| குறுகிய கைச் சட்டை | 525 | 00 |
| நீளக் கைச் சட்டை | 825 | 00 |

(1) (i) ஒரு குழந்தை பெனியன், ஒரு குறுங் காற்சட்டை, ஒரு நீளக் காற்சட்டை ஆகியவற்றை வாங்கிய கமலன் செலுத்த வேண்டிய மொத்தப் பணம் யாது?

(ii) அதற்காக அவர் 1500 ஐச் செலுத்தும்போது கிடைக்கும் மீதிப் பணம் யாது?

(2) முகம்மதுவிடம் 750 ரூபாய் உள்ளது. அவர் ஒரு நீளக் கைச் சட்டையை வாங்குவதற்கு அவருக்கு மேலும் எவ்வளவு பணம் தேவை?

20 ஒரு கடையில் இருந்த விலைச்சுட்டி கீழே தரப்பட்டுள்ளது.

| விலைச்சுட்டி | |
|---|---|
| பருப்பு 1 kg | ரூ. 124.00 |
| அரிசி 1 kg | ரூ. 100.00 |
| கடலை 1 kg | ரூ. 260.00 |
| நெத்தலி 1 kg | ரூ. 900.00 |

(1) சிட்டையைப் பூரணப்படுத்துக.

| பொருள் | வாங்கிய அளவு | 1 kg இன் விலை | | பெறுமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் | ரூபாய் | சதம் |
| கடலை | 500 g | 260 | 00 | ............ | ....... |
| பருப்பு | 1 kg 250 g | 124 | 00 | ............ | ....... |
| அரிசி | 3 kg | 100 | 00 | ............ | ....... |
| மொத்த விலை | | | | ............ | ..... |

(2) (i) தந்தையார் 2 kg பருப்பு, 2 kg 500 g அரிசி, 250 g நெத்தலி ஆகியவற்றை வாங்கினார். அதற்கான சிட்டையைத் தயாரிக்க.

(ii) இப்பொருள்களை வாங்குவதற்கு 800 ரூபாயைச் செலுத்தும் போது கிடைக்கும் மீதிப் பணத்தைக் காண்க.

**21** **தீர்க்க.**

(1)

| | $l$ | ml |
|---|---|---|
| | 15 | 750 |
| + | 9 | 165 |
| | | |

(2)

| | $l$ | ml |
|---|---|---|
| | 20 | 65 |
| + | 18 | 850 |
| | | |

(3)

| | $l$ | ml |
|---|---|---|
| | 16 | 725 |
| − | 9 | 460 |
| | | |

(4)

| | $l$ | ml |
|---|---|---|
| | 17 | 325 |
| − | 7 | 615 |
| | | |

(5)

| | $l$ | ml |
|---|---|---|
| | 5 | 810 |
| × | | 5 |
| | | |

(6)

| | $l$ | ml |
|---|---|---|
| | 9 | 215 |
| × | | 4 |
| | | |

(7)

$3 \overline{\big)\, 27\ l\ \ 195\ \text{ml}}$

(8)

$4 \overline{\big)\, 28\ l\ \ 480\ \text{ml}}$

**22** **தீர்க்க.**

(1) 4 $l$ 380 ml நிறப் பூச்சினை 4 பாத்திரங்களில் சமமாக இடும்போது ஒரு பாத்திரத்தில் அடங்கும் நிறப் பூச்சின் அளவு யாது?

(2) ஒரு பாத்திரத்தில் 12 $l$ 250 ml பால் உள்ளது. அத்தகைய மூன்று பாத்திரங்களில் உள்ள பாலின் மொத்த அளவு யாது?

(3) ஒரு தாங்கியில் 35 $l$ 500 ml நீர் இருந்தது. பயன்படுத்திய பின்னர் அதில் எஞ்சியிருந்த இருந்த நீரின் அளவு 4 $l$ 700 ml ஆகும். பயன்படுத்திய நீரின் அளவு யாது?

(4) ஒரு பாத்திரத்தில் இருந்த மண்ணெண்ணெயில் 17 $l$ 850 ml ஐப் பயன்படுத்திய பின்னர் 7 $l$ 150 ml மண்ணெண்ணெய் எஞ்சியிருந்தது. தொடக்கத்தில் பாத்திரத்தில் இருந்த மண்ணெண்ணெயின் அளவு யாது?

**23** **தீர்க்க.**

(1)

| | kg | g |
|---|---|---|
| | 14 | 125 |
| + | 32 | 911 |
| | | |

(2)

| | kg | g |
|---|---|---|
| | 34 | 04 |
| + | 26 | 86 |
| | | |

(3)

| | kg | g |
|---|---|---|
| | 44 | 857 |
| − | 21 | 763 |
| | | |

(4)

| | kg | g |
|---|---|---|
| | 82 | 65 |
| − | 61 | 74 |
| | | |

(5)

| | kg | g |
|---|---|---|
| | 17 | 250 |
| × | | 4 |
| | | |

(6)

| | kg | g |
|---|---|---|
| | 22 | 130 |
| × | | 5 |
| | | |

(7) 4 ) 48 kg 324 g

(8) 3 ) 27 kg 225 g

**24** **தீர்க்க.**

(1) ஒரு கடையில் 14 kg 650 g வெள்ளைச் சீனியும் 20 kg 310 g பழுப்புச் சீனியும் இருந்தன. அதில் 17 kg 250 g பழுப்புச் சீனி விற்கப்பட்டது.

(i) கடையில் இருந்த சீனியின் மொத்த அளவு யாது?

(ii) விற்கப்பட்ட பின்னர் எஞ்சியிருக்கும் சீனியின் அளவு யாது?

(2) 14 kg 400 g தேயிலை நிறையிற் சமமாக இரு பொதிகளில் இடப் பட்டது. அப்போது ஒரு பொதியில் உள்ள தேயிலையின் அளவு யாது?

(3) சம நிறையுள்ள 5 மிளகாய்த் தூள் பைக்கற்றுகளில் உள்ள மிளகாய்த் தூளின் மொத்த அளவு 5 kg 625 g ஆகும். ஒரு பைக்கற்றில் உள்ள மிளகாய்த் தூளின் அளவு யாது?

25 ஒரு விவாசயப் பண்ணையிலிருந்து விளைச்சலாகப் பெறப்பட்ட காய்கறிகளின் அளவுகள் பற்றிய தகவல்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அதனைக் கொண்டு விடை எழுதுக.

| காய்கறி வகை | அளவு |
|---|---|
| புடலங்காய் | 33 kg 650 g |
| வெண்டிக்காய் | 65 kg 50 g |
| கறிமிளகாய் | 7 kg 150 g |
| கத்தரிக்காய் | 30 kg 120 g |
| பயற்றங்காய் | 33 kg 150 g |
| பூசணிக்காய் | 64 kg 200 g |

(1) பயற்றங்காயினதும் வெண்டிக்காயினதும் மொத்த நிறை யாது?

(2) கத்தரிக்காயின் நிறைக்கும் புடலங்காயின் நிறைக்கும் இடையே உள்ள வித்தியாசம் யாது?

(3) சென்ற தடவை கறிமிளகாயின் விளைச்சல் இத்தடவையில் உள்ள விளைச்சலிலும் பார்க்க 2 kg 30 g இனால் கூடியதாகும். சென்ற தடவை கறிமிளகாயின் விளைச்சல் யாது?

(4) இத்தடவை பயற்றங்காயின் விளைச்சலிலும் பார்க்கச் சென்ற தடவையில் உள்ள விளைச்சல் மூன்று மடங்கினால் கூடியதாகும். சென்ற தடவை பயற்றங்காயின் விளைச்சல் யாது?

(5) இத்தடவை பூசணிக்காயின் விளைச்சல் சென்ற தடவையில் உள்ள பூசணிக்காயின் விளைச்சலின் இருமடங்காகும். சென்ற தடவை பூசணிக்காயின் விளைச்சல் யாது?

26 பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைச் சதுரமுகி, கனவுரு, நான்முகி, உருளை என்னும் திண்மங்களிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

(1) முக்கோண முகங்கள் மாத்திரம் உள்ள திண்மம் யாது?


(2) 8 உச்சிகளும் 12 விளிம்புகளும் உள்ள திண்மங்கள் யாவை?

(3) சதுர முகங்களை மாத்திரம் கொண்ட திண்மம் யாது?

(4) இரு வட்ட முகங்கள் உள்ள திண்மம் யாது?

27 ஒரு ஆரம்பப் பாடசாலையில் உள்ள பிள்ளைகளின் வரவு பற்றிய தகவல்கள் பின்வரும் நிரல் வரைபில் தரப்பட்டுள்ளன.

**ஆரம்ப பாடசாலையின் பிள்ளைகளின் வரவு**




(1) பிள்ளைகளின் வரவு கூடுதலாக உள்ள நாள் யாது?

(2) பிள்ளைகளின் வரவு குறைவாக உள்ள நாள் யாது?

(3) புதன்கிழமை வந்த பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

(4) பிள்ளைகளின் வரவு 25 ஆகவுள்ள நாள் யாது?

28 ஒரு நாள் காலை உணவுக்காகப் பிள்ளைகள் கொண்டு வந்த உணவு வகைகளையும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| உணவு வகை | பிள்ளைகளின் எண்ணிக்கை |
|---|---|
| சோறு | 10 |
| கடலை | 5 |
| பாண் | 4 |
| பயறு | 4 |
| ரொட்டி | 2 |

*பயிற்சிப் புத்தகத்தின் ஓர் அடைப்பினால் வகைகுறிக்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கையை உகந்தவாறு தெரிந்தெடுத்து மேற்குறித்த தகவல்களை ஒரு நிரல் வரைபிற் காட்டுக.*

29 ஒரு வாரத்தில் பிள்ளைகளின் வரவு பற்றிய தகவல்கள் பின்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளன.

| திங்கட் கிழமை | செவ்வாய்க் கிழமை | புதன் கிழமை | வியாழக் கிழமை | வெள்ளிக் கிழமை |
|---|---|---|---|---|
| 500 | 568 | 590 | 575 | 550 |

அட்டவணையைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.

(1) *திங்கட்கிழமை .......................... பிள்ளைகள் பாடசாலைக்கு வந்துள்ளனர்.*

(2) *செவ்வாய்க்கிழமையிலும் பார்க்க வியாழக்கிழமை .......................... பிள்ளைகள் கூடுதலாகப் பாடசாலைக்கு வந்துள்ளனர்.*

(3) *வந்த பிள்ளைகளின் எண்ணிக்கை 580 இலும் கூடுதலாக உள்ள நாள் .......................... ஆகும்.*

**30** **சில நகர்களுக்கிடையே உள்ள தூரத்தைக் காட்டும் ஒரு வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது. இங்கு நகர்களுக்கிடையே உள்ள தூரம் கிலோமீற்றரிற் காட்டப்பட்டுள்ளது.**

| | | | | மட்டக்களப்பு |
|---|---|---|---|---|
| | | | பதுளை | 166 |
| | | அவிசாவளை | 171 | 213 |
| | அனுராதபுரம் | 195 | 272 | 195 |
| அம்பேபுஸ்ஸ | 154 | 42 | 177 | 242 |

(1) *அவிசாவளையிலிருந்து பதுளைக்கு உள்ள தூரம் யாது?*


(2) *மட்டக்களப்பிலிருந்து அனுராதபுரத்திற்கு உள்ள தூரம் யாது?*

(3) *எவ்விரு நகர்களுக்கிடையே கூடுதலான தூரம் உள்ளது?*

(4) *எவ்விரு நகர்களுக்கிடையே உள்ள தூரம் 177 km ஆகும்?*

(5) *அம்பேபுஸ்ஸவிலிருந்து அவிசாவளைக்குச் சென்று மட்டக்களப்பிற்குச் செல்லும் ஒருவர் பயணிக்கும் மொத்தத் தூரம் யாது?*

**31** **பின்வரும் உருவைப் பார்த்து விடை எழுதுக.**




(1) *நிழற்றப்பட்டுள்ள பகுதி பத்தில் எத்தனை பங்குகள்?*

(2) *நிழற்றப்பட்ட பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.*

(3) *நிழற்றப்படாத பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.*

32. ஒரு வீட்டுத் தோட்டத்தில் உள்ள மரங்களின் அமைவு பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. அதனைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.




(1) வீட்டிற்கு வடக்கே ..................... வீட்டிற்கு ............................ மூங்கிற் பற்றையும் உள்ளன.

(2) மாமரத்திற்கு ........................... மரமுந்திரிகை உள்ளது.

(3) வீட்டிற்கு ................................ அலரியும் மேற்கே .................................. உள்ளன.

(4) வீட்டிற்கு .............................. ஈரப்பலா உள்ளது.

(5) ஈரப்பலாவுக்கு ...................................... வீடும் கொய்யாவும் உள்ளன.

33 பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| எண்பெயர் | இந்து - அராபிய எண்குறி | உரோம எண்குறி |
|---|---|---|
| நான்கு | ............. | ............. |
| ............. | 14 | ............. |
| பத்தொன்பது | ............. | ............. |
| ............. | ............. | xv |
| ............. | ............. | ix |
| ............. | 16 | ............. |
| ............. | 20 | ............. |
| பதினெட்டு | ............. | ............. |

34 **தீர்க்க.**

(1) ஒரு பெட்டியில் உள்ள பென்சில்களின் எண்ணிக்கை 6 ஆகும். அத்தகைய 48 பெட்டிகளில் உள்ள பென்சில்கள் 4 வகுப்புகளிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஒரு வகுப்பிற்குக் கிடைத்த பென்சில்களின் எண்ணிக்கை யாது?

(2) ஒரு மாம்பழம் 15 ரூபாய் ஆகும். அத்தகைய 10 மாம்பழங்களுக்காகச் செலவிடப்படும் பணம் 5 நண்பர்களுக்கிடையே சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுமெனின், ஒரு நண்பன் செலவிட்ட பணம் யாது?

(3) ஒரு மேடை நாடகத்தை இரசிப்பதற்காகச் சனிக்கிழமை 430 இரசிகர்களும் ஞாயிற்றுக்கிழமை 475 இரசிகர்களும் திங்கட்கிழமை 360 இரசிகர்களும் வந்தனர். சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாட்களிலும் வந்த இரசிகர்களின் எண்ணிக்கைகளின் மொத்தத்திற்குச் சமமாக இருப்பதற்குத் திங்கட்கிழமை மேலும் எத்தனை இரசிகர்கள் நாடகத்தை இரசிப்பதற்கு வரவேண்டி இருந்தது?

**35** பின்வரும் நெய்யரியின் மீது

(1) ஒரு செங்கோணத்தை வரைக.


(2) செங்கோணத்திலும் பார்க்கச் சிறிய ஒரு கோணத்தை வரைக.

(3) செங்கோணத்திலும் பார்க்கப் பெரிய ஒரு கோணத்தை வரைக.


(1) (2)

(3)


பின்னிணைப்பு 1




## பின்னிணைப்பு 2




பின்னிணைப்பு 3




## பின்னிணைப்பு 4



பகுதி A



பகுதி B



பகுதி C